67

குண்டூசி

ஜூன்.....எட்டு அணா

2-9

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

பாக்யா பிக்சர்ஸ்

மங்கையர்க்கரசி

சின்னப்பா... கண்ணாம்பா... அஞ்சலி தேவி...
கிருஷ்ணன்..மதுரம்..லலிதா...பத்மினி மற்றும் பலர்

விவரங்களுக்கு:
F.நாகூர், கீழ்ப்பாக்கம், சென்னை.

உடனே எழுதுங்கள்!

சொற்ப பிரதிகளே உள்ளன

நக்ஷத்திர மாலை

2

"குண்டூசி" எழுதியது

★

எம். கே. டி. பாகவதர், கிருஷ்ணன்-மதுரம், ஹொன்னப்ப பாகவதர், பி. எஸ். கோவிந்தன், காமெடியன் சாரங்கபாணி, எம். கே. ராதா, எம். வி. ராஜம்மா, குமாரி ருக்மணி, வஸந்த கோகிலம், தனலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி போன்ற

21 சினிமா நக்ஷத்திரங்களின்
வாழ்க்கை வர்ணனையும்
அழகிய ஆர்ட் படங்களும்
அடங்கியது

விலை ரூ. 2. தபாற் சிலவு அணு 6

வி. பி. பி. கிடையாது. முன் பணம் அனுப்பவும்.

"குண்டூசி" காரியாலயம்,
25, கிடங்குத் தெரு, சென்னை 1.

7. VELLORE—1

விரைவில் எதிர்பாருங்கள்!

சியாமளாவின்

இன்பவல்லி

[ஏராளமான பொருட் செலவில் தயாரிக்கப்பட்ட
ஓர் மகோன்னத படம்
ராஜகுமாரி - மந்திரிகுமாரன் காதல் சித்திரம்
ரஸமான சம்பவங்கள் நிறைந்தது]

நடிகர்கள்:

மஹாலிங்கம் · சரோஜா
சரஸ்வதி · மேனகா · கிருஷ்ணன்
மதுரம் · சாமிநாதன் · சஹாதேவன்
... மற்றும் பலர்.

டைரக்ஷன்: **S. நொடானி.**

சங்கீதம் G. ராமநாதன். பாட்டு: P.R. ராஜகோபால அய்யர்
ஸ்டூடியோ: ரத்னா, சேலம்
ஒளிப்பதிவு: வஸந்தராவ் ஜக்தப். ஒலிப்பதிவு: R.G. பிள்ளை

ஸூபர் ரிலீஸ்

134116
சென்னை-600 0



SPC

ஸூபர் பிக்சர்ஸ் சர்க்யூட், மதறாஸ்-7

சென்னையில் ஏவி எம் ஸ்டூடியோ

ரசிகர்களுக்கு எங்கள் காணிக்கை

MADRAS

விரைவில் வருகிறது

வாழ்க்கை

வாழ்க்கைச் சித்திரம்

வசனம்: ப.நீலகண்டன்

சமூகக் கதையில் ஒரு புரட்சி

ஓர் இரவு

கற்பனை ஓவியம்

கதை: வசனம்:

C.N.அண்ணாத்துரை M.A

மகோன்னதத் தயாரிப்பு

பிரம்மாண்டமான காட்சிகளுடனும்

நட்சத்திர நடிகர்களுடனும்

புலந்திரன்

கர்ண பரம்பரைக் கதை

திரைக்கதை: எம்.வீ.ராமன்-ப.நீலகண்டன்

வசனம்: ப.நீலகண்டன்

AVM

புரொடக்ஷன்ஸ்

சென்னை···24

உங்களுக்குத் தேவையான

எல்லாவித ஜவுளிகளுக்கும்

இன்றே

விஜயம் செய்யுங்கள்

Meerans

மீரான்ஸ்

பக்கிங்காம் கர்னுட்டிக் மில்
ஜவுளிகள், மேட்டூர் மில்
ஜவுளிகள், பம்பாய், அஹ
மதாபாத் மில் ஜவுளிகள்
இவைகளுக்கு விநியோகஸ்தர்கள்

★

மற்றும் ட்விட்கள், உல்லன்,
வெளி நாட்டு ஜவுளிகள்
முதலிய எல்லாம் கைவசமுள்ளன

★

எஸ். மீரா சாகிப்

அண்ட் பிரதர்ஸ்

38, ஈவ்னிங் பஸார் ரோடு,

சென்னை.

தலைமை ஆபீஸ்:

18, கிடங்குத் தெரு, சென்னை-1.

OFFICE OF ... MADRAS

பட்டை 2. ஊசி 9.

ஜூன் 1949

இந்த ஊசியில்

விளம்பர வரி	தலையங்கம்	5
உள்ளது உள்ளபடி	'ஜடாயு'	6
நவ ஜீவனம்	பட விமர்சனம்	8
தலைக்குக் கல்லு !	தமாஷ் படம்	9
லலிதா, பத்மினி	வாழ்க்கை வர்ணனை	10
லலிதா, பத்மினி	வர்ணப் படம்	17
எஸ். வரலக்ஷ்மி	ஆர்ட் படம்	18
வாழ்க்கையோ வாழ்க்கை	'சுதர்சன்'	19
குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	23
செய்திப் படங்கள்	படங்கள்	31
நுனிப்புல்	'வெட்டுக்கிளி'	39
இது செய்தி	படச் செய்திகள்	4
பொது ஜனம் பேசுகிறார்	கடிதங்கள்	4
புஷ்பா ஹன்ஸ்	ஆர்ட் படம்	5
மாதுரி தேவி	மூவர்ணப் படம்	52
மங்கையர்க்கரசி	திரைக் கதை	56
பிரம்மலோகம்	ஸ்டுடியோச் செய்திகள்	66
குண்டூசி டைரி	தினக் குறிப்பு	6

குண்டூசி காரியாலயம் :

25, கிடங்குத் தெரு, சென்னை-

டெலிபோன் : 4316.

வருஷ சந்தா : இந்தியா, இலங்கை-ரூ
பர்மா, முதலிய வெளி நாடுகள்-ரூ.

தனிப் பிரதி : இந்தியா—அணா. 8.
இலங்கை-சதம் 50. வெளிநாடு-அ.

ரண்டாம் பதிப்பு வெளிவந்து விட்டது!

காரசாரமான மறுப்பு!

திருஅண்ணாத்துரை எழுதிய கம்பரசத்திற்கு
சரியான மறுப்பு இதோ வெளிவந்துவிட்டது

கம்பரசத்திற்கு சாவு மணி!

புதுமுறை வெளியீடு
மாம்பலம் ☆ சென்னை 17.

ஏஜண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு.

நீங்கள் படித்தீர்களா ?

பிரபல ஆசிரியர்
"லால்ஜி"
எழுதிய

பறக்கும் குதிரை

(அதியற்புதமான கதை)

விலை அணா 3

முன்பணமாக அனுப்பும் ஏஜண்டு களுக்கு $33\frac{1}{3}\%$ கமிஷன் தரப்படும். தனிப் புத்தகம் வேண்டுவோர் 4 அணாக்களுக்கு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பாப்பா பதிப்பகம்
43, நாகப்பய்யர் தெரு,
சென்னை-5.

குடந்தையில் பிரசித்திபெற்ற காட்சிசாலை

தாங்கள்
ஒரு முறை
நேரில் விஜயம்
செய்யுங்கள்

*

உங்கள் மனதிற்கு
இன்பத்தைக்
கொடுக்கக் கூடிய

பம்பாய் தேவி தயாள்
கம்பெனியார் தயார் செய்யு
"ஸ்டேபிரைட்"
பாத்திரங்களும்

R. C. A.
ரேடியோக்களும்,
பீட்டர்பேன் பாட்டரி செட்
ரேடியோக்களும்

எங்களிடம் உள்ளன.

MUHIL.

R. D. S. ராஜன் அண்டு சன்ஸ்

136, பெரியதெரு . . . . . கும்பகோணம்

பட்டை 2
ஊசி 9

குண்டூசி

ஆசிரியர் பி.ஆர்.எஸ்.கோபால்

ஜூன்
1949

விளம்பர வரி

சென்னை சர்க்கார் பத்திரிகைக் காரர்களை திடுக்கிடச் செய்யும் ஒரு செய்தியை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது, பத்திரிகைகளுக்குக் கிடைத்து வரும் விளம்பர வருமானத்தின் மீது பத்து சத விகிதம் வரி விதிக்க நினைப்பதாக சென்னை சர்க்கார் வெளியிட்டிருக்கின்றனர்.

"சுதந்திரப் போரில் பத்திரிகைகள் பெரும் பங்கு எடுத்துக் கொண்டிருக்கின்றனவே. அப்படியிருக்க பத்திரிகைகள் தம் வருமானத்தில் ஒரு பகுதியை நம் தேசிய சர்க்காருக்கு, வரியாகக் கொடுத்தால் என்ன?" என்று நேயர்கள் கேட்கலாம். பத்திரிகைப் பொருளாதாரம் தெரியாத எல்லோருமே அப்படித் தான் கேட்பார்கள்.

பத்திரிகைகள் ஜனங்களுக்கு சொற்ப விலையில் விற்கப் படுகின்றன. ஆனால், அவைகளைத் தயாரிப்பதற்கு ஆகும் செலவு, விற்பனை மூலம் கிடைக்கும் வரவை விட அதிகமாயிருக்கிறது. இப்படியாக ஏற்படும் நஷ்டத்தையே சரிக்கட்டுகிறது விளம்பர வருமானம். உலகம் பூராவி
... இந்த ... ப்

பனை வரி கொடுக்கின்றன.
மொத்த லாபத்திற்கு வருமான
வரி கட்டுகின்றன. அப்படி
யிருக்க, விளம்பர வருமானத்தைத்
தனி வருமானமாகக் கருதி அதன்
மீது தனி வரி விதிப்பது அநீதியா
கும். இந்த வரி பெரிய பத்திரி
கைகளை மிகவும் பாதிக்கும். சின்
னப் பத்திரிகைகளையோ அடி
யோடுமென்னியைத் திருகிவிடும்.

இந்தியாவில் இன்னும் பத்திரி
கைத் தொழில் சுபீட்ச நிலை
மையை அடையவில்லை. மேனாட்டு
பத்திரிகைகளைப் போல் சிறந்த
முறையில் நாம் நம் பத்திரிகை
களை அச்சிடுவதற்கு முடியாமல்
இருப்பதற்குக் குறுக்கே நிற்பது
அதிக லாபமின்மைதான். பத்தி
ரிகைத் தொழில் லாபம் அளிக்
கும் தொழிலாக இன்னும் ஆகி
விடவில்லை. ஏதோ ஒரு ஆர்வம்
காரணமாகவோ, அல்லது ஏதோ
ஒரு பிரசாரத்திற்காகவோ தான்
இந்தியப் பத்திரிகைகள் நடத்தப்
பட்டு வருகின்றன. சர்க்கார்
பிடிவாதமாக இந்த வரியை விதி
க்க ஆரம்பித்தால், சீக்கிரமே
அநேக பத்திரிகைகள் மறைந்து
விடும். புதிதாகப் பத்திரிகைகள்
தோன்றுவதற்கும் முட்டு
கட்டை விழும். மக்களின் அறிவு
வளர்ச்சிக்கு இந்த வரி பொ

உள்ளது உள்ளபடி

"ஜடாயு"

சினிமாத் தொழில் பற்றி சர்க்காரின் செய்கைகளைக் கண்டிப்பதற்காக இந்தமாதம் 1வ தியேட்டர்களைமூடுவதாயிருந்த தீர்மானம் இம் மாதம 30-ந் தேதியன்று நிறைவேற்றப்படுமாம். ஒற்றுமை வாசனை சிறிதுகூட அறியாத சினிமாத் தொழிலில் இப்படியாக அகில இந்திய நடவடிக்கை எடுப்பதற்கான ஒற்றுமை ஏற்பட்டிருப்பது எனக்கு ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் அளிக்கிறது.

எப்படி ஏற்பட்டது?

சுதந்திர சர்க்கார் தோன்றியதும், இந்த சர்க்கார் முந்தின அடிமை சர்க்காரைப் போலன்றி சினிமாப் படங்களின் சக்தியையும், உபயோகத்தையும் உணர்ந்து கொண்டு, பிரமாதமான ஆதரவளித்து, இந்திய சினிமாத் தொழில் ஹாலிவுட்டையே தோற்கடிக்கும்படிச் செய்து விடுவார்கள் என்று இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கனவு கண்டார்கள். வர வர சர்க்காரின் போக்கைக் கண்டதும் அவர்களுக்கு, "உடும்பு வேண்டாம்; கை தப்பினுல் போதும்" என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது. இந்த நிலைமைதான் மேற் சொன்ன ஒற்றுமையை ஏற்படுத்தி யிருக்கிறது.

தவருன போக்கு

சுதந்திர சர்க்கார் பதவி ஏற்றதும், முதலில் நம் சினிமாத் தொழிலின் நிலைமையை ஆராய்வதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அதை அவர்கள் இன்னமும் செய்யவில்லை. அதற்குப் பதில் அவர்கள் தமாஷா வரியை முதலில் உயர்த்தினுர்கள். அப்பொழுது பெரிய கூச்சல் ஏற்பட்டது. அதைச் சர்க்கார் ஒருவாறு சமாளித்துக் கொண்டார்கள். இப்பொழுதோ அவர்கள் தியேட்டர்களில் ஒரு காட்சிக்கு ரூ $2\frac{1}{2}$; ரூ $1\frac{1}{2}$; ரூ. வீதம் வரி வசூலிக்கத் தீர்மானித்திருக்கிருர்கள். இது தியேட்டர்களையும் படத் தொழிலையும் மிக பாதிக்கும்.

உண்மை நிலைமை என்ன?

சென்னை மாகாணத்தில் முன்பெல்லாம் வருஷத்திற்கு நாற்பதிற்குக் குறையாமல் படங்கள் தயாராகின. இப்பொழுதோ இருபதுபடங்கள் கூடத் தயாராகப் படவில்லை. முன்பு வெளிவந்த படங்களின் பெரும்பாலானவைகளுக்கு நல்ல வசூல் ஏற்பட்டன. இப்பொழுது வெளிவரும் பெரும்பாலான படங்களுக்கு வசூல் இல்லாமல், நஷ்டம் அடைகிருர்கள். முன்பு ஒரு லக்ஷத்திற்குள் ஒரு படத்தை முடித்துவிடுவார்கள். இப்பொழுதோ ஒரு நக்ஷத்திரத்திற்கே ஒரு லக்ஷம் கொடுக்க வேண்டி யிருக்கிறது. இதை யெல்லாம் அறிந்தவர்கள் நம் சினிமாத் தொழில் சுபிக்ஷமாய் இருப்பதாக சொல்லவே மாட்டார்கள். ஏதோ வெற்றி பெறும் சில படங்களுக்கு ஜனங்கள் நீண்ட "க்யூ"வில் நின்று டிக்கெட வாங்குவதைப் பார்த்துவிட்டுச் சொல்லுவது தவருன அபிப்பிராயம் ஆகும். இவ்வித தவருன அபிப்பிராயத்தையே நம் சர்க்கார் கொண்டுள்ளது வருந்தத் தக்கது.

கண் விழிப்பார்களா?

படத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் சர்க்காரின் போக்கை பன்முறை கண்டித்திருக்கிருர்கள். ஆனுல், சர்க்கார் என்னவோ படத் தொழில்மீது வரிச்சுமையை அதிகரித்துக் கொண்டே போகிறது. அவர்களைக் கண் விழிக்கச் செய்வதற்காகவே இப்பொழுது அகில இந்திய தியேட்டர் வேலைநிறுத்தம் நடக்கப்போகிறது. இந்த வேலைநிறுத்தம் நல்ல பலனை அளிக்கும் என்றே எதிர்பார்க்கிறேன்.

என்ன செய்ய வேண்டும்?

இந்தத் தொழிலை சர்க்கார் ஒரு மாற்ருந் தாயின் குழந்தை போல நடத்துவது வருந்தத் தக்கதாகும். வரிகளை உயர்த்துவதற்கு முன்பாக, சர்க்கார் இத் தொழிலின் உண்மை நிலைமையை பரிசீலிப்பதற்கான ஒரு கமிட்டியை ஏற்படுத்தட்டும். இத் தொழிலில் முன்னேற்றத்திற்கு சர்க்கார் என்ன செய்ய வேண்டும் என்பதை அக் கமிட்டி சிபார்சு செய்யட்டும். தற்போதைய சினிமாத் தொழில் மிகுந்த சுபிக்ஷ நிலைமையில் இருப்பதாக கமிட்டி தீர்மானித்தால்சர்க்கார் வரியைஉயர்த்தட்டும். அதுதான் ஜனநாயக முறையாகும். அதில்லாமல், இத் தொழிலின் வெளிப் பகட்டைக் கொண்டு இத் தொழில் சுபிக்ஷமாக இருப்பதாகத் தீர்மானித்தால் அது பெருத்த அநீதியாகும். அவ்வித அநீதியை நம் சர்க்கார் செய்யக் கூடாது என்றுதான் நான் வற்புறுத்துகிறேன்.

கடைசிச் செய்திகள்

செலக்ட் கமிட்டி முடிவு

சினிமாக் காட்சிகளுக்கு வரி விதிக்கக் கொண்டுவந்த மசோதாவைப் பற்றி செலக்ட் கமிட்டி தன் முடிவை வெளியிட்டு விட்டது.

முதலில் குறிப்பிட்ட வரியை செலக்ட் கமிட்டி பாதியாகக் குறைத்திருப்பதுடன், சில டூரிங் கொட்டகைகளுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிப்பது எனவும் தெரிவித்திருக்கிறது. ஆனால் முனிசிபாலிடிகளிலும், பத்தாயிரம் ஜனத் தொகை கொண்ட பஞ்சாயத்து போர்டுகளிலும் நடக்கும் 'டூரிங்' கொட்டகைகளுக்கு இந்த வரி உண்டு.

நண்பர் :—உங்கள் படம் ஒரு மாதத்தில் முடிந்து விடும் என்று போன வருஷமே சொன்னீர்களே. ஏன், தாமதம்? பணக் கஷ்டமோ?

பட முதலாளி :—அதெல்லாமில்லை......

நண்பர் :—ஏதேனும் பெரிய ஸெட் போட வேண்டியிருக்கிறதோ?

பட முதலாளி :—கடைசி தர்பார் 'ஸெட்' ஆறு மாதமாய் தயாராயிருக்கிறது.

நணபர் —பின்னும் ஏன் தாமதம்?

பட முதலாளி .—இந்த 'ஸெட்'டில் நான்கு நக்ஷத்திர நடிகர்கள் ஒன்றாய் சேர்ந்து நடிக்க வேண்டியிருக்கிறது. அவர்களை ஒன்று சேர்ப்பதுதானே...............

நடராஜன் திருமணம்

பாலு பிரதர்ஸில் மூத்தவரின் புத்திரரான ஸ்ரீ. நடராஜனுக்கு சமீபத்தில் திருமணம் நடந்தேறியதை யொட்டி சென்னை 'வுட்லண்ஸி'ல் இம் மாதம் 6-ந்தேதி யன்று ஒரு சிற்றுண்டி விருந்து நடந்தது. வந்திருந்தோரின் சார்பாக ஸ்ரீமான் யு. பதி, சகஸ்ரநாமம் போன்ற சில பிரமுகர்கள் மணமக்களுக்கு ஆசி கூறினார்கள்.

ஏ. வி. எம். படத்தில் வைஜயந்தி

ஏ. வி. எம். தயாரிக்கப் போகும் படம் ஒன்றில் வைஜயந்தி மாலா ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

பாஸ்கரின் அடுத்தது

பாஸ்கர் பிக்சர்ஸார் ஸ்ரீ. ஆர். கே. நாராயணனின் கதை ஒன்றை சமூகப் படமாக தயாரிக்கப் போகிறார்கள்.

தொழிலாளர் பிரச்னை கொண்ட "நவஜீவனம்"

நாகய்யா கண்ணாம்பா சிறந்த நடிப்பு

தற்சமயம் நம் நாட்டில் தொழிலாளர்-முதலாளி தகராறுகளே முக்கிய பிரச்னையாக விளங்குகிறது. அதுவே நவஜீவனத்தின் முக்கிய கருத்தாய் அமைந்திருக்கிறது. ஐஸ்வரியம் ஒரு மனிதனை எவ்வளவு மாற்றிவிடுகிறதென்பதும் கூடவே விளக்கப்படுகிறது. மொத்தத்தில் நல்ல கருத்துள்ள கதை அமைந்த படம்.

ஆனால், கதையில் முக்கிய பாத்திரங்கள் யார் என்றே கூற முடியாமலிருக்கிறது. கதாசிரியர் இரண்டு மூன்று கருத்துக்களைப் புகுத்தமுயன்றிருப்பதன் விளைவாக இருக்கலாம் இது. ஒரு முக்கிய மத்திய கருத்துடன் கதை முன்னேறாததால் கதையின் உச்சக் கட்டம் சப்பென்றிருக்கிறது. யாரோ ஒருத்தி சொன்னாள் என்றவுடன் கமலா அன்னபூரணியிடம் திடீரென்று துவேஷங் கொள்ளுவது பொருத்தமாயில்லை. ஆனால் வசனங்களை உதயகுமார் கூடிய வரையில் நன்றாக எழுதியிருக்கிறார்.

இப்படத்தின் டைரெக்டர் நாகபூஷணம் கதையை விறுவிறுப்புடன் படமாக்கியிருக்கிறார். நடிக, நடிகைகளை அவர் இன்னமும் கசக்கிப் பிழிந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. படத்தின் ஆரம்பப் பகுதியில் மட்டும் கொஞ்சம் விறுவிறுப்பு குறைவாக உள்ளது.

நடிப்பில் நாகய்யாவும் கண்ணாம்பாவும் எளிதில் மனதைக் கவர்ந்து விடுகின்றனர். படத்திற்கு ஜீவன் அளிப்பது இவர்களது நடிப்புதான். "நியாயம் இதுதானா" என்ற நாகய்யா பாடும் பாட்டு மனதை உருக்குகிறது. ஆனால் கண்ணாம்பாவின் பாட்டு சோபிதமாயில்லை.

பிரபாசராக நடிக்கும் ஸ்ரீராமனுக்கு நல்ல முகத்தோற்றம் இருக்கிறது. ஆனால் சில கோணங்களில் அவர் முகத்தை மோசமாகவும் படம் பிடித்திருக்கிறார்கள். அவருக்கு வேஷம் நன்கு பொருந்தியிருக்கிறது. நடிப்பும் மோசமில்லை. சம்பாஷணை சுத்தமாயில்லை.

கமலாவாகத் தோன்றும் எஸ். வரலக்ஷ்மிக்கும் வேஷம் நன்கு பொருந்தியிருக்கிறது. நடிப்பும், பேச்சும் மிடுக்காக இருக்கிறது. ஆனால் முகத்தில் பாவங்களை நன்கு வெளியிட இவர் பழக்கிக் கொள்ள வேண்டும். இவரது பாட்டுகள் இனிமையாய் அமைந்திருக்கின்றன. முக்கியமாக "ஸ்ரீராம ரகுகுல" என்ற கடைசிப் பாட்டு குறிப்பிடத்தக்கது.

ராமச்சந்திரனுக்கு இப் படத்தின் மூலம் நல்ல பெயர் கிடைக்கும். அவரது நடிப்பு சிரிப்பூட்டும் வகையிலுள்ளது. "நான்ஸென்"ஸை இவர் தவறான சில இடங்களில் உபயோகித்திருப்பது தான் 'நான்ஸென்ஸாக' இருக்கிறது.

நாராயண ராவுக்கு இப் படத்தில் அதிக வேலையில்லை. உள்ளவரை நன்றாயிருக்கிறது.

டி. ஏ. ஜெயலக்ஷ்மியும் நன்கு நடிக்க முயன்றிருக்கிறார்; ஆனால் இவர் ஆடியுள்ள நடனம் அழகாகயில்லை. பேபி ராஜாமணி ஓரிரண்டு காட்சிகளிலேயே வருகிறார் என்றாலும் மனதைக் கவர்கிறார். கணேசன், சரோஜினி, துளஸி இவர்களது நடிப்பும் பரவாயில்லை.

படத்தில் வெங்கட்டராமனின் சங்கீத டைரெக்ஷன் பாராட்டக் கூடியபடி உள்ளது. நல்ல மெட்டுகளில் பாட்டுகள் அமைந்துள்ளன. ஆனால் நடனத்தைப் பற்றி பிரமாதமாய் சொல்வதற்கில்லை.

கமலா சாந்தியை அடித்து விரட்டுவது, மாடிப்படி வழியாய் கமலா உருண்டு விழுவது, அண்ணாசாமி துப்பாக்கியினால் சுட வரும்போது அன்னபூரணி குறுக்கிட்டு காயம் அடைவது, அதன்பின் அவளிடம் கமலாவும் பிரபாகரும் மன்னிப்புக் கேட்கும்போது "எங்கே நீங்கள் இருவரும் சிரியுங்கள் பார்க்கலாம்" என்று சொல்லுவது போன்ற காட்சிகள் தத்ரூபமாய் அமைந்திருக்கின்றன.

ஒலிப்பதிவு திருப்திகரமாயில்லை. ஆனால் ஒளிப்பதிவு பரவாயில்லை. சில காட்சிகள் ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு திடீர் திடீர் என்று தாவுகின்றன.

மொத்தத்தில் நவஜீவனம் சிறந்த கருத்துக்கள் கொண்ட நல்ல படம். பிரசாரமும் பொழுது போக்கும் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன. தொழிலாளர்களிடமிருந்து படத்திற்கு நல்ல ஆதரவு கிடைக்குமென்று எதிர்பார்க்கிறேன்.

—பி. ஆர். எஸ்.

தலைக்குக் கல்லு !

ஏ...ஏ...ஏ...ஏ !...புளிமூட்டை ! அம்மாப் பெரிய கல்லை யார் தலைலே போடப் போகிறீர் ? "மருதநாட்டு இளவரசி"யின் [காதலனைக் காப்பாற்றுவதற்காகவா ! வில்லன் தலைமேல்தானே ? சரி போடும் !...பேஷாய் போடும் !

லலிதா

கலையை ரஸிக்கத் தெரிந்தவர்களும் சொற்பப் பேர்களாகவே இருந்தனர், புகழ் பெறுவதும் அக்காலத்தில் சுலபமாக இருந்தது. ஆனால் இக்காலத்திலோ நாட்டியத்தை ரஸிக்கத் தெரியாதவர்கள் தான் சொற்பமாயிருப்பர். ஆகவே இந்தக் காலத்தில் நூற்றுக் கணக்கானவர்களிடையே ஒரு புது நக்ஷத்திரம் தோன்றி, கலா ரஸனை மிக்க ரஸிகர்களின் பாராட்டுதலைப் பெற்று, தனிப்பட்ட புகழை தேடிக்கொள்ளுவது மிக கடினமான காரியமாகும். அதுவும் இரண்டு வருஷகாலத்திற்குள் இவ்வளவு புகழையும் ஒரு நக்ஷத்திரம் பெற்றுவிடுவது சாத்திய மற்ற காரியமாகவே கருதப்படும். இவ்வித அசாத்தியமான காரியத்தில் வெற்றி பெற்று, இன்றைய நாட்டிய அரங்கில் லலிதா-பத்மினி சகோதரிகள் இணையற்ற ஸ்தானம் வகிப்பதோடு கூட சினிமா உலகிலும் இவர்கள் அதே போல் இணையற்று விளங்குவது ஆச்சரியப்படத்தக்க விஷயமாகும்.

தென்னிந்திய நாட்டிய வானத்தில் இதுவரை நூற்றுக் கணக்கான நடன நக்ஷத்திரங்கள தோன்றி யிருக்கின்றன. அவை தனித்தனியாகவும், ஜோடியாகவும், கோஷ்டியாகவும தோன்றி மின்னியிருக்கின்றன. நக்ஷத்திரங்களுக்கு இயல்பான மினு மினுப்புடன் அவை கொஞ்ச காலத்திற் கெல்லாம் மறைந்திருக்கின்றன. இருந்த போதிலும், இன்னமும் குட்டி நக்ஷத்திரங்களும், பெரிய நக்ஷத்திரங்களும் மேடை ஏறிய வண்ணமே யிருக்கின்றன. வாரத்திற்கு ஒரு அரங்கேற்றல் கச்சேரியாவது இப்பொழுது நடைபெற்று வருகிறது.

முன்பெல்லாம் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய சொற்பப் பேர்களே நாட்டியம்ஆடி வந்தனர். ஆனால் இப்பொழுதோ இந்த எண்ணிக்கை கணக்கெடுத்து மாளாத வகைக்கு விரிந்து விட்டது. எங்கு திரும்பினாலும் நாட்டியம் மயமதான்.

அந்தக் காலத்தில் சொற்பப் பேர்கள் ஆடி வந்தது போலவே இக்

லலிதா—பத்மினி சகோதரிகள் முதன் முதலாக சென்னையில் 1947ம் வருஷம் ஏப்ரல் மாதம் 4ந்தேதியன்று டாக்டர் பி. ராம ராவ் அவர்களின் ''எக்ஸ்ரே இன்ஸ்டிட்யூட்''டில் நடனம் ஆடினர். அது முதல ஓய்வு ஒழி

வாழ்க்கை
ண்ணே

பத்மினி

வின்றி பல ஊர் மேடைகளில் நடனம் ஆடியிருக்கின்றனர். இதுவரை பதினாறு படங்களில் அவர்களது நாட்டியம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இன்னும் இருபது படங்களில் நாட்டியம் ஆட அவர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் சில பட முதலாளிகள தங்கள் படங்களிலும் பங்கெடுத்துக்கொளள வேண்டுமென்று அவாகளைத் தொந்தரவு செய்துகொண்டிருக்கின்றனர். படங்களில் நடித்தபடியே அவர்கள் மேடைக் கச்சேரிகளையும் விடாமல் நடத்தி வருகின்றனர். மேடையிலும் சரி, சினிமாவிலும் சரி வேறு யாருமே நாட்டியத்தில இவர்களவ்வளவு பிராபல்யமும, புகழும் அடைந்ததேயில்லை எனறு நான துணிந்து கூறுவேன்.

லலிதா - பத்மினி இவர்களின் சொந்த ஊர் திருவனந்தபுரம். ஆகவே அவர்களை "திருவாங்கூர் சகோதரிகள்" என்று அழைக்கின்றனர்.

குண்டூசி



1

2

1. ராதாகிருஷ்ண நடனம்.
2. திருவனந்தபுரத்தில் — லேடி நை த, பத்மினி, லேடி மௌன்ட் பேட்டன், லலிதா.
3. சென்னையில்—பண்டிட் ஜவாஹருடன் லலிதா, பத்மினி.
4. பாம்பாட்டி நடனம்.
5. சென்னையில் — பத்திரிகாசிரியர்கள் மஹாநாட்டில்— பத்மினி, தேவதாஸ் காந்தி, மணியன் நடேசன்.

அவர்களது தகப்பனாரான ஸ்ரீ.பி.கே. பிள்ளை அந்த சமஸ்தானத்தில் ஒரு தனவந்தர்; மிராசுதாரர். அவர்களது தாயாரின் பெயர் சரஸ்வதி அம்மாள். அவருக்குச் சந்திரன் என்ற ஒரு புத்திரனும், ராகிணி என்ற ஒரு பெண்ணும்கூட இருக்கின்றனர். ராகிணி தன் தமக்கைகளுடன் மேடையில் அடிக்கடி நடனம் ஆடி வருவது நேயர்களுக்கே தெரியும்.

லலிதாவும், பத்மினியும் ஐந்தாறு வயதுச் சிறுமிகளாய் இருந்தபோது அவர்களுக்கு நடனக்கலையில் தணிக்க முடியாத பிரேமை ஏற்பட்டுவிட்டது. அவர்களது பிடிவாதம் காரணமாக, அவரது தாயார் அவர்களை பிரபல கோபிநாத் அவர்களிடம் சிக்ஷைக்கு அமர்த்தி, கதகளி நடனத்தைப் போதிக்கும்படி செய்தார். சுமார் ஆறு வருஷகாலம் இந்த சிக்ஷை நீடித்தது. அதே சமயத்திலேயே, திருவடமருதூரிலிருந்து நட்டுவனார் மஹாலிங்கம் பிள்ளையை பிரத்தியேகமாக வரவழைத்து அவரிடம் பரத நாட்டியம் ஆடவும் சிக்ஷை பெற்றனர்.

அவர்களது அரங்கேற்றல் கச்சேரி திருவனந்தபுரத்திலுள்ள வி. ஜே. டவுன் ஹாலில் நடைபெற்றது. "ஸ்ரீ வாஞ்சி ஏழை சகாய நிதி" என்ற நிதியை ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் ஆரம்பித்து வைத்தார். அந்த நிதிக்கு உதவுவதற்காகவே மேற்படிக் கச்சேரி ஏற்பாடு செய்யப்பட்டது. அக் கச்சேரிக்கு விஜயம் செய்திருந்தவர்கள் அத்தனை பேரும் லலிதா–பத்மினி இருவரையும் வாயாரப் புகழ்ந்து கொண்டே வீடு திரும்பி

னர். அப்பொழுது அவர்களுக்கு முறையே 7, 6 வயதே ஆகியிருந்தது.

இந்த நடன சகோதரிகளின் மாமனை லெப்டினென்ட் கமாண்டர் எஸ். பி. என். நாயர் இப்பொழுது சென்னையில் கடற்படை அதிகாரியாக இருந்து வருகிறார். இவர் அப்பொழுது (1944-ம் வருஷத்தில்) பம்பாயில் உத்தியோகம் பார்த்து வந்தார். அவரைப் பார்ப்பதற்காக தாயார் சரஸ்வதி அம்மாள் தம் பெண்களுடன் பம்பாய்க்குச் சென்றார். தம் மருமாள்கள் நடனக் கலையில் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பதை அறிந்த ஸ்ரீ. நாயர், அவர்களது நடனக் கச்சேரி ஒன்றிற்கு ஏற்பாடு செய்தார். அப்பொழுது லலிதாவுக்கு 12 வயதும், பத்மினிக்கு 11 வயதும், ராகிணிக்கு 7 வயதும் ஆகியிருந்தது.

அன்றைய ஆட்டத்தை வந்திருந்தோர் வெகுவாகப் பாராட்டினார்கள் என்று சொல்லுவது மட்டும் போதாது. அவர்களது எதிர்கால வாழ்க்கையையும், தற்போதைய புகழையும் நிர்ணயித்தது அன்று அவர்கள் ஆடிய அந்த ஆட்டந்தான் என்று சொல்ல வேண்டும்.

அன்றைய ஆட்டத்திற்கு விஜயம் செய்திருந்த பல பிரபலஸ்தர்களில்

நாட்டிய நிபுணர் உதயசங்கரும் ஒருவராவார். இச்சிறுமியரின் நடனத்தைக் கண்டு அவர் மனம் பூரித்தார். தாம் அப்பொழுது தயாரித்து வந்த கல்பனா படத்தில் நடனம் ஆடுவதற்கும் அவர்களை ஒப்பந்தம் செய்து கொண்டு, அவர்களைச் சென்னைக்கு அழைத்து வந்தார். அவர்களுக்கு அவர் மணிபுரி நடனங்களைக் கற்றுக் கொடுத்தார்.

கல்பனா பட ஒப்பந்தத்திலிருந்து அவர்கள் விடுபடுவதற்குச் சுமார் மூன்று வருஷகாலம் ஆயிற்று. அது வரை அவர்களுக்கு பல ஊர் மேடைகள் மீது தோன்றிப் புகழ் பெற வேண்டுமென்ற துடிதுடிப்பு இருந்த போதிலும், அந்த ஒப்பந்தம் அதற்கு இடம் சராமலிருந்தது. அந்த இடையூறு நீங்கியதும் அவர்கள் டாக்டர் பி. ராமராவின் "எக்ஸ்ரே இன்ஸ்டிட்யூட்"டில் நடனம் ஆடினார்கள்.

அதைத் தொடர்ந்து இந்த சகோதரிகள் புயல் வேகத்தில் பல ஊர் மேடைகளில் நடனம் ஆடலாயினர். அவர்களது புகழும் மடை திறந்த வெள்ளம் போல் பறவலாயிற்று.

இதையறிந்து ஓரிரண்டு இடங்களில் அவர்களது நாட்டியத்தைப் பார்த்த பின் டைரெக்டர் ஸ்ரீ ராமுலு நாயுடு அவர்கள் இருவரையும் அப்பொழுது தாம் தயாரித்துவந்த கன்னிகா படத்தில் நடனம் ஆடுவதற்காக ஒப்பந்தம் செய்து கொண்டார். கல்பனாவுக்கே அவர்கள் முதன் முதலில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டனர் என்றாலும் முதன் முதலில் திரைக்கு வந்த படம் கன்னிகாதான்.

ஞானசௌந்தரி

கன்னிகாவில் அவர்களது ஆட்டம் அழகாக அமைந்து விடவே, மேடையிலும், படங்களிலும் ஆடுவதற்கு அவர்களுக்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டு விட்டது. 1947-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் சென்னை மியூஸியம் தியேட்டரில் அவரது பொதுக்கச்சேரி ஒன்று நடந்தது. இக் கச்சேரிக்கு, முன்பு கவர்னராயிருந்த நை அவர்களின் மனைவி தலைமை வகித்தார். அவர் லலிதா–பத்மினி நடனத்தை மிகவும் ரஸித்துவிட்டு அவர்களது நடனத்தை புகழ்ந்து ஒரு நற்சாட்சிப் பத்திரத்தை அளித்திருக்கிறார்.

இதன் பிறகு லலிதா–பத்மினி கோஷ்டியினர் கிண்டியில் நடந்த அகில இந்திய ஸ்திரீ

கல்பனா

"மங்கையர்க்கரசி" படத்தில்
லலிதா-பத்மினி கத்தி நடனம்.

கள் மஹாநாட்டிலும், சென்னையில் நடந்த அகில இந்தியப் பத்திரிகாசிரியர்கள் மஹாநாட்டிலும் நடன விருந்தளித்தனர். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் விஜயம் செய்திருந்த பத்திரிகாசிரியர்கள் அவர்களது நடனச் சிறப்பைக் கண்டு பிரமித்தனர். பிரமித்ததோடு சும்மா யிருந்தார்களா? தங்கள் தங்கள் பத்திரிகைகளில் பத்தி பத்தியாக இந்த சகோதரிகளைப் பாராட்டி எழுதி விட்டார்கள். தம்பிடிகூட செலவில்லாமல் இவர்களது புகழ் இந்தியா பூராவிலும் பல பாஷைப் பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டுவிட்டது.

சென்ற வருஷ மத்தியில் நம் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு சென்னைக்கு விஜயம் செய்தாரல்லவா? அப்பொழுது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் லலிதா-பத்மினி நடனம் ஒரு அம்சமாக இருந்தது. பண்டிட்ஜி அவர்களது நடனத்தை ரஸித்துப் பார்த்ததோடு, அவர்களோடு சில நிமிஷ நேரம் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தது அவர்களது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

இதன் பின் சென்ற வருஷக் கடைசியில் புது டில்லியில் சர்வதேச விமானப் போக்குவரத்து மஹா நாட்டில் லலிதா-பத்மினி கோஷ்டியினர் நடன விருந்தை அளித்துவிட்டு புகழுடன் திரும்பினார்கள்.

அவர்கள் இவ்வாறு காட்டுத் தீ போல் பிரபலம் அடைந்து வந்தது அநேகருக்குச் சந்தோஷத்தை அளித்தது. அவர்கள் எல்லோரையும்விட ஸிநேடடல் ஞானசௌந்தரியின் கூட்டு டைரெக்டர்களில் ஒருவரான ஸ்ரீ. ஜோஸப் தளியத்திற்கு இவ் விஷயம் இரட்டிப்பு சந்தோஷத்தை உண்டு பண்ணியது. பிரபலம் அடைந்து வரும் இந்த சகோதரிகள் திருவனந்தபுரத்தில் ஸ்ரீ. தளியத்தின் அண்டை வீட்டுக்காரர்கள்—அவருக்கு பால்யம் முதலே மிகப் பழக்கமுடையவர்கள் என்பது ஒன்று. அவர்களைத்

தாப் தயாரித்து வந்த ஞான சௌந்தரியில் நடனம் ஆடச் செய்யலாம் என்பது இன்னொன்று. அதேபோலவே அவர் செய்தும் விட்டார்.

ஞானசௌந்தரியிலும் அவர்களது நடன பாகம் நன்கு அமைந்தது. எனவே பட முதலாளிகள் அவர்களை ஏக காலத்தில் சூழ்ந்து கொண்டனர். கோகுல தாஸி, வேதாள உலகம், பாரதி (கன்னடம்), விநோதினி, மஹாபலி, பக்த ஜனு, போஜன் ஆதித்தன் கனவு, மோஹினி, வேலைக்காரி, கபட அரட்சகாயா (சிங்களம்) கீதகாந்தி, பவளக்கொடி ஆகிய படங்களுக்கெல்லாம் அவர்கள ஒப்பந்தம் செய்யப்பட்டு இதுவரை ஆடி முடித்திருக்கிறார்கள்.



மேற்சொன்ன படங்களைத் தவிர 20 படங்களில் நடிக்க அவர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றனர். மங்கையர்க்கரசி, கன்னியின் காதலி, பரணியின் லைலா மஜ்னு, (தெலுங்கு, தமிழ), பாலாஜியின லைலாமஜ்னு (தமிழ்), இதய கீதம், நாட்டிய ராணி, தேவ மனோஹரி, மாயாவதி, இளவரசி, திருகுபட்டு, (தெலுங்கு), கிருஷ்ண விஜயம், விஜய குமார், வன சுந்தரி, வாழ்க்கை, பொன் முடி, அமர கவி, மச்சரேகை, சங்கராந்தி (தெலுங்கு), தெருப்பாடகன் (தெலுங்கு), ஆகிய படங்களிலெல்லாம அவர்களது நடனம் சேர்க்கப் படவிருக்கிறது.

அவர்கள் தோன்றியுள்ள படங்கள் தோன்றப்போகும் படங்கள்

(63-ம் பக்கம் பார்க்க)

முகில்

வாழ்க்கையோ வாழ்க்கை

சுதர்சன்

— சிறு கதை —

"அம்மா அவள் இன்னிக்கி வந்து விடுவாள், இல்லையா?"

"யாரடி 'அவள்'?"

"வீட்டுக்கார கனகம்மாள் தான்!"

"வரட்டுமே. அதற்காக நீயேன் இப்பொழுது கஷ்டப்படுகிறாய்?"

"ஹும். போனவாரம் அவள் பேசின பேச்சு, நாம் அவளுக்குக் கொடுத்த வாக்கு—எல்லாம் உனக்கு மறந்து போய் விட்டதா?" என்று அங்கலாய்த்துக் கொண்டாள் விமலா.

"எல்லாருக்கும் கையில் பணம் வந்து கொண்டிருந்தால் யோக்யமாகத்தான் இருப்பார்கள். இல்லையென்றால் அவர்கள் வாக்கு அவ்வளவுதான்" என்றாள் சாவதானமாக காமாட்சி அம்மாள்.

"ஆமாம்; பணம் இருந்தால் அப்படியே கொடுத்து விடுவார்கள்" என்று சொல்லிக் கொண்டே, விமலா அதுவரை பயந்து சொல்லிக் கொண்டிருந்த வீட்டுக்கார கனகம்மாள் உள்ளே வந்தாள்.

"வரும்பொழுதே ஏன் இப்படி கோபமாக வருகிறீர்கள்?......உட்காருங்கள்" என்றாள் விமலா.

"எனக்கு உட்கார நேரமில்லை. என்ன சமாசாரம்? ஏதாவது பணம் உண்டா, இல்லையா?" என்றாள் கடுமையான தொனியில் கனகம்மாள்.

"அவசரப்படுகிறீர்களே. வந்தவர் உட்கார்ந்து பேசினால் என்ன? ஏன் நின்று கொண்டே பேசுகிறீர்கள்?"

"நான்தான் முதலிலேயே சொல்லி விட்டேனே. எனக்கு வேலையிருக்கிறது, நான் போக வேண்டும் என்று."

"நானும் இப்பொழுதுதான் உங்களைப் பற்றி அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்........."

"அது கிடக்கட்டும். பணம்?"

"அதைத்தான் சொல்வதற்குள் நீங்கள் இப்படிக் குறுக்கிடுகிறீர்களே. நிதானமாகக் கேளுங்கள்."

"நிதானமெல்லாம் ஆகிவிட்டது. ஒரு வருஷமாய் இப்படித்தான் காத்துக் கொண்டிருந்தேன். இனிமேல் இந்த நிதானத்துக்கே இடம் இல்லை. சட்புட்டென்று விஷயத்தைச் சொல். இன்னிக்கி இந்த விவகாரம் இரண்டிலே ஒன்று தெரிய வேண்டும்."

"அது என்ன இரண்டிலே ஒன்று?"

"ஒன்று பணம்; இல்லையென்றால் உங்கள் சாமான்களை வெளியே தூக்கிப் போடவேண்டும்."

"கொஞ்சம் பொறுங்கள் அம்மா. இந்த வாரம் கட்டாயமாக உங்கள் பணம் பூராவும் கொடுத்து விடுகிறேன். வீணாகக் கோபப்பட வேண்டாம்."

"இது மாதிரி இந்த ஒரு வருஷத்திலே எத்தனையோ வாரங்களையும், கிழமைகளையும் பார்த்து விட்டேன். இனிமே அது முடியாது."

"இத்தனை நாள் பொறுத்த மாதிரி இந்த ஒரு வாரமும் பொறுங்கள்."

"அது முடியாது. இனிமே ஒரு நிமிஷம் கூடப் பொறுக்க மாட்டேன். பங்களா மாதிரி வீட்டைக் கட்டி உங்களிடம் கொடுத்து விட்டு நான் என் கஷ்டப்பட வேண்டும்? வீடு கிடைக்காத நாளிலே எத்தனையோ பேர் ஆயிரம், இரண்டாயிரம் என்று 'அட்வான்ஸ்' கொடுத்து நிறைய வாடகையும் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். உங்களால் பணம் கொடுக்க முடியவில்லையென்றால் பேசாமல் காலி பண்ணிவிடுங்கள். அதைத் தானே இத்தனை நாளும் சொல்

லிக் கொண்டிருக்கிறேன்" என்றாள் கனகம்மாள்.

"வாய்ப்பேச்சு வாயிலிருக்கும்போதே ஏன் இப்படி அடிக்கடி காலிபண்ணு காலி பண்ணுன்னு சொல்கிறீர்கள்?......உங்களுக்கு வேண்டியது பணம். அதை இந்த வாரக் கடைசிக்குள் கொடுத்து விடுகிறேன்" என்றாள் விமலா சற்று கடுமையாக.

"என்னாலே அது வரை பொறுக்க முடியாது. எனக்குப் பணம் ரொம்ப முடையாக இருக்கிறது. வரி கட்டவேண்டும். இன்னும் எவ்வளவோ செலவு இருக்கிறது. இப்ப பணம் இல்லேன்னு உங்கள் சாமான்களை எடுத்துக்கொண்டு எங்கேயாவது போங்கள். அதைச் செய்தாலே எனக்கு உபகாரமாயிருக்கும். கோடி புண்ணியம் கூட."

"அந்தக் கோடிப் புண்ணியம் உங்களுக்கு வேண்டாமா? இத்தனை நாளைப் போல் ஒரு நாலு நாள் பொறுங்கள். உங்கள் பணம் எங்கும் போய் விடாது. பயப்பட வேண்டாம். நாங்கள் எங்கும் போய்விட மாட்டோம்."

"போங்கள் என்று தான் சொல்கிறேனே. போகமாட்டோம் என்று உறுதி வேறு சொல்கிறீர்களா? ஹும் உங்களைச் சொல்லி என்ன பிரயோஜனம். முதல் மாதம் வாடகை கொடுக்காத போதே காலி பண்ண வைத்திருந்தால் இவ்வளவு தொந்திரவு வந்திருக்காது. பச்சாதாபம் பார்த்தது தலைக்கே தீங்கா வந்திருக்கிறது" என்று அங்கலாய்த்துக் கொண்டாள் கனகம்மாள்.

அதுவரை பேசாமல் இருந்த காமாட்சி அம்மாள் "நீங்கள் செய்த உபகாரத்தை மறந்தா விட்டோம்? என்னவோ எல்லோருக்கும் ஒரு சமயம் கஷ்டம் வரும் தான். அதற்காக அவர்களை ஊரை விட்டே துரத்தி விடுவதா?" என்றாள்.

"ஒரு மாதம் இரண்டு மாதம் கஷ்டம். எப்பொழுது பார்த்தாலும் இதே பாட்டுத் தானா? இந்த மாதிரி குடித்தனக்காரர்களை இதுவரை பார்த்ததே இல்லை."

"இந்த வீட்டுக்கு வந்த நாலு வருஷத்திலே, இந்த ஒரு வருஷமாத்தானே இப்படி வாடகை கொடுக்கத் தாமதம் ஆகியிருக்கிறது? அதுக்கு முன்னாலே முதல் தேதியே உங்கள் வீடு தேடி வந்து பணத்தைக் கொடுக்கவில்லையா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்."

"அதையெல்லாம் நினைத்துப் பார்த்துத்தானே இத்தனை நாள் சும்மா இருந்தேன்......நீங்கள் உங்கள் கஷ்டத்தைப் பற்றியே பேசுகிறீர்களே, என்னுடையதையும் யோசித்துப் பாருங்கள். எனக்கு வேறு வரும்படி இருக்கா? இருக்கிற இரண்டு வீட்டை வைத்துக்கொண்டு தான் காலந்தள்ளணும். வியாதிக்காரப் பிள்ளையைக் காப்பாத்தணும். நான் இன்னும் எத்தனை நாள் தான் பொறுப்பது, நீயே சொல்லு?"

"உங்களுக்கும் கஷ்டம் தான் என்பது எனக்குத் தெரியாமலில்லை. எங்களுக்கும் கஷ்டமாக இருப்பதால்தான் அப்படிச் சொல்கிறோம்."

"வாடகை கொடுக்கத்தான் உங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறதே ஒழிய, உங்கள் செலவுகளுக்கெல்லாம் மாத்திரம் பணம் கிடைத்துக் கொண்டுதான் இருக்கிறது."

"அப்படியானால் நாங்கள் சோறுகூடத் தின்னாமல் சாகவேண்டும் என்று சொல்கிறீர்களா?" என்றாள் அதுவரை சும்மா இருந்த விமலா பதட்டத்துடன்.

"உங்களைச் சாகச்சொல்லவில்லை. வீட்டைத்தான் காலி பண்ணச் சொன்னேன்" என்றாள் கனகம்மாள் சற்று கடுகடுப்பாக.

"விமலா! பேசாமல் இரு. நீ ஏதாவது சொல்லப்போக அது விபரீதமாக முடியும்...கனகம்மா, இந்த வாரம் பொறுத்துக்கொள். கட்டாயம் பணத்தை எந்த விதத்திலாவது கொடுத்து விடுகிறேன்."

"முடியவே முடியாது. இன்னிக்கு எனக்குப் பணம் வேண்டும். முடியுமா சொல்."

"திடீரென்று கேட்டால் எப்படிச் சொல்வது?" என்று கெஞ்சுதலுடன் கூறினாள் காமாட்சியம்மாள்.

"இன்னிக்குள்ளே பணம் கொடுத்தால் கொடு. இல்லாவிட்டால் காலி செய்துவிடு!"

காமாட்சியம்மாள் சிறிது நேரம் யோசித்தாள். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போல் "சரி, அப்படியே இன்றைய மாலைக்குக் கொடுக்கிறேன். சாயந்திரமாக வாருங்கள்" என்றாள்.

தாயார் சொன்னதைக் கேட்டு விமலா திடுக்கிட்டாள். ஒருமுறை அவள் முகத்தைப் பார்த்தாள். பிறகு மௌனமானாள்.

கனகம்மாளும் அதற்குச் சம்மதித்தவன் போல் "சரி, வருகிறேன். சரியாக மாலை ஏழுமணிக்கெல்லாம் வருவேன். நீ என்ன பண்ணுவாயோ தெரியாது. பணம் வேண்டும். அப்புறம் என் மேல் மனஸ்தாபப்படவேண்டாம்" என்று சொல்லி விட்டு மள மள வென்று வெளியே போய்விட்டான்.

மௌனமாக உட்கார்ந்திருந்த விமலா வீட்டுக்கார அம்மாள் வெளியே போனதும் "அம்மா" என்றாள்.

"என்ன?"

"சாயந்திரம் பணம் கொடுப்பதாய் சொன்னாயே; எப்படிக் கொடுக்கப் போகிறாய்?"

"எப்படி என்று என்னைக் கேட்கிறாயே? எப்படியாவது கொடுத்துத்தான் ஆகவேண்டும்."

"அது தான் எப்படி என்று கேட்கிறேன்?"

"அவனை அனுப்பினால் போதும் என்று தானும் யோசனையில்லாமல் எதையோ சொல்லி விட்டேன். இப்பொழுது தான் நினைவுக்கு வருகிறது. மாலை அவன்

'காலைகண்டி' போல வந்து நின்றால் என்ன செய்வது?"

"இத்தனை நாழி அவள் வாயிலேகேட்ட சொல் போதாது. மாலையிலும் கேட்க வேண்டுமா? நல்ல பிழைப்பு இது!"

"பிழைப்பைப் பத்தித் தான் நன்றாகத் தெரிந்திருக்கிறதே. அப்பவே நான் சொன்னேன்: 'வேண்டாம் இந்த சினிமாத் தொழில்' என்று. கேட்டாயா?' என்றாள் காமாட்சி அம்மாள்.

"சினிமாவில் சேர்ந்ததற்கு என்ன குறைச்சலாம்?"

"தெரியறதே என்ன குறைச்சல் என்று? ஹாய்யா இரண்டு விடு வேலை செய்து பிழைத்துக்கொண்டிருந்தோம். கையில் கூடக் கொஞ்சம் பணம் இருந்தது. அப்படியே இன்னமும் கொஞ்ச நாள் வேலை செய்து கொண்டிருந்தால் உனக்கும் ஏதாவது வரன் கிடைத்திருக்கும். எனக்கும் அது நிம்மதியாக இருந்திருக்கும்."

"போதுமே உன் ராமாயணம். பழைய சமாசாரங்களை எடுத்து விடுகிறாயே..."

"ஆமாண்டி, நான் சொன்னா அப்படித் தான் இருக்கும். நாலு பேரை கேட்டுப் பார் தெரியும். நன்றாக இருந்த குடித்தனத்தைப் படுபாவி கெடுத்தாள். இல்லாவிட்டால் இத்தனை நாள் நீயும் கலியாணமாகி, பிள்ளையும் குட்டியுமாக சௌக்கியமா இருந்திருப்பே."

"வனஜா செய்தது என்ன தப்பா...? அவள் நான் கஷ்டப் படுவதைக் கண்டு தன்னைப் போல் சினிமாவில் சேர்ந்தால் நல்ல வரும்படி வரும் என்று சொன்னாள். நாம் சம்மதித்த பிறகு தானே அவள் என்னை ராமகிருஷ்ணா பில்ம்ஸில் சேர்த்து வைத்தாள்."

"ஆமாம். இல்லையென்று சொல்ல வில்லையே. அவர்களுடைய ராதா மோஹனில் நீ தோழியாக நடித்ததைக் கண்டுதான் சத்தியநாதனில் ஒப்பந்தம் செய்தார்கள். பணமும நிறையக் கிடைத்தது."

"பிறகு நான் இரண்டாவது கதா நாயகியாக நடித்த 'சுந்தரரூபன்'தான் என்ன குறைச்சல்? அவர்களும்தான் நாலாயிரம் ரூபாய் கொடுத்தார்கள். பிறகுதான் நம்மை தரித்திரம் வந்து பிடித்துக் கொண்டது. இல்லாவிட்டால்

(தொடர்ச்சி 63-ம் பக்கத்தில்)

கிண்டுசெய்யக் கேளுங்கள்

கே. அப்துல் சத்தார் (சோழுவாம்)

நான் அடிக்கடி தமிழ் சினிமாப் பார்த்ததால் எனக்கு 'பைத்தியமே' பிடித்து விட்டது. இதற்கு ஏதேனும் மருந்துண்டா?

தம் தமிழ்ப் படங்களை இடைவிடாது பார்த்துக் கொண்டிருந்தால் பைத்தியம் மட்டும் என்ன — அதைவிட மோசமானது ஏதேனும் இருந்தால் --அதுகூடப் பிடிக்கும்.

பி. சுப்ரமணியம் (பினங்கு)

சில நடிக நடிகைகள் சினிமாவில் சேரும்போது துரும்பாய் இருக்கிறார்கள். பின்னர் நக்ஷத்திரமாகுபபோது பீப்பாயாகப் பருத்துப் போய் விடுகிறார்களே? இதற்குக் காரணம் என்னவோ?

ஒரு வேளை ஷூட்டிங்கின்போது வசனங்களுள் சிலவற்றை அவர்கள் சாப்பிட்டு விடுவதனாலோ என்னவோ?

எம். முகம்மது (திருநெல்வேலி)

நல்லதம்பியில் என். எஸ். கிருஷ்ணன் அம்பட்டன் வேலை செய்கிறாரே? இத்தொழில் அவருக்கு எத்தனை கால அநுபவமோ?

எனக்கு அதெல்லாம் தெரியாது. ஆனால் கொஞ்ச காலத்திற்கு முன்வர் எல்லாம், க்ஷவரமான பட முதலாளிகளுக்கு குடுமி (காமிக்) ஒட்ட வைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார் என்பது உமக்குக்கூடத்தெரிந்திருக்குமே!

விரல், ராஜு (வட்டவளை, இலங்கை)

டி. ஏ. மதுரத்தின் குழந்தைக்கு என்ன வயதிருக்கும்? குழந்தையின் பெயர் என்ன?

கலைச் செல்வி இறக்காமலிருந்தால் சென்ற மே மாதத்தில் அக்குழந்தையின் ஆண்டு நிறைவை நாகலமாய் கொண்டாடியிருப்பார்கள் கிருஷ்ணனும், மதுரமும்.

வி. எஸ். ராமன் (செட்டி நாடு)

வேலைக்காரி படத்தில் கோர்ட்டில் வழக்கு நடக்கும் முன்பே பேப்பர் பையன், "ஹரிஹர தாஸ் கொலை வழக்கு பேப்பர்" என்று விற்கிறான். இது சரியா?

சரியல்லதான்; 'எடிட்' செய்தவரின் தவறுயிருக்கும்.

நடிப்பில் மங்காத புகழுடன் விளங்கும் கண்ணாம்பா பாக்யா பிக்சர்ஸின் "மங்கையர்க்கரசி" படத்தில் நடிக்கிறார்.

கே. சிதம்பரம் (கொடுமுடி)

பவளக்கொடியில் டி. ஈ. வரத னுக்கு குரல் இரவல் கொடுத்துள்ள வர் யார்?

பாபநாசம் சிவன் அவர்களின் சிஷ்ய ரான மணி.

ஜெய கோபால் (காவனூர்)

நவஜீவனத்தில் நடிக்கும் வர லக்ஷ்மிக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

ஆகவில்லை.

என். எஸ். ராமையா (சிவகெங்கை)

வி. என். ஜானகியின் சொந்த ஊர் எது?

திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள வைக்கம்.

டி. எஸ். நாராயணன் (திருச்சி)

கீதை காந்தியில் நடிக்கும் பேபி பத்மா கே. சுப்ரமண்யத்தின் மகளா?

சாக்ஷாத் அவரது மகள்தான்.

"ரத்னகுமார்" படத்தில் கிருஷ்ணன் ராஜா வேஷத்தில் காட்சி அளிக்கிறர். மதுரம் பஞ்சாபி உடையுடன் நாட்டியம் ஆடத் தயாராயிருக்கிறர்.

ஜி. கன்னையா (குமாரம்)

பிரபலமாய் விளங்கும் லலிதா பத்மினி சகோதரிகள் எந்தக் கட்சி யைச் சேர்ந்தவர்கள்?

நாட்டியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று தாராளமாய் சொல்லலாம்.

எஸ். நாகப்பன் (பண்ருட்டி)

கனகாங்கி படத்தில் எஸ். ஜி. கிட்டப்பாவின் மருமானை கங்கா தரன் நடிப்பதாக எழுதியிருந்தீர் களே. அவரது விலாஸத்தைத் தெரி விக்க முடியுமா?

அவரது தற்போதைய விலாஸம்:— "நெ. 12 பகவந்தம் குப்தா தெரு, சென்னை. 17" என்பது.

ரூஜ் முகம்மது (ஜார்ஜ் டவுன்)

டி. ஆர். மஹாலிங்கம், எம். கே. டி. பாகவதர், சின்னப்பா, ஹொன் னப்பா ஆகியோருள் லக்ஷ ரூபாய் வாங்கிய நக்ஷத்திரம் யார்?

முதலில் கூறியுள்ள இருவரும்.

எஸ். டி. முத்தையா (கொழும்பு)

டி. ஆர். மஹாலிங்கம், ஸி. எஸ். ஜெயராமன் இவ்விருவருள் பாட்டில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்க லாம்?

சந்தேகமன்னியில் மஹாலிங்கத்திற் குத்தான்.

வி. சங்கரநாரரயணன் (?)

பி. எஸ். சரோஜா என்ன ஜாதி யைச் சேர்ந்தவர்? அவருக்கு வய தென்ன? குழந்தைகள் உண்டா?

வேளாள ஜாதியைச் சேர்ந்த சரோஜா வுக்கு இப்பொழுது இருபதாவது வயது நடந்து கொண்டிருக்கிறது. கலாராணி என்ற ஒரே ஒரு புத்தி ரியை மட்டும் அவர் பெற்றுள்ளார்.

பி. முஹம்மது இஸ்மெய்ல் (ஏரவாஞ்சேரி)

சினிமாவில் நடிக்க ஆர்வமுடைய இளைஞர்களும், மங்கையரும் நிறைய இருக்கிறர்களே. அவர்களைச் சேர்த் துக் கொண்டு கலை முன்னேற்றத்திற்

"ஆதித்தன் கனவி"ல் ஜோடி சேர்ந்த மஹாலிங்கமும், அஞ்சலி தேவியும் "மாயாவதி" தமிழ்ப் படத்தில் இணை பிரியாத காதலர்களாக தோன்றுகின்றனர்.

கான படங்களை ஏன் நம் பட முதலாளிகள் தயாரிக்கக் கூடாது?

நன்றாய்ச் சொன்னீரே! இந்தத் தொல்லைகளை யெல்லாம் உத்தேசித்துத்தான் நம் பட முதலாளிகள் சினிமாவை ஒரு கலையாக மதிப்பதில்லை!

வி. கே. சாமி (பேரையூர்)

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் ஆகிய இருவருக்கும் உண்மையில் விவாஹம் நடந்திருக்கிறதா?

இல்லை. அன்னிக்கி "வஸந்தசேனு" படம் எடுத்தாங்களில்லே. அப்போ இவரு அவரைப் பார்த்தாரு; அவரு இவரைப் பாத்தாரு. அப்பறம் இந்தக் காதல்னு சொல்லுவாங்களே—என்ன—அது இவங்களுக்கும் வந்திடிச்சு. அது மொதல் இவங்க ஒண்ணாவே இருக்கறுங்க. இவங்களுக்குப் பதிலா கிருஷ்ணனோட தம்பியும், மதுரத்தோட தங்கையும் கண்ணாலம் கட்டிக் கிட்டாங்க. என்ன—இப்ப நான் சொன்னது புரிஞ்சிடுத்தில்லே?

ஏ. எம். கே. எஸ். (மருடஞ்சாவடி)

குண்டுசியாரே! நீர் இறந்து விட்டால் என் கேள்விகளுக்கு யார் பதில் கொடுப்பார் என்றே நான் கவலைப் படுகிறேன்.

போயும் போயும் இதற்காகவா பிரதர், நீங்கள் கவலைப்படுகிறீர்கள். என்னுடனேயே மேல் உலகத்திற்கு வந்து விடும். நேரிலேயே பதில்களைச் சொல்லி விடுகிறேன். தபால் செலவும் மிச்சம்!

எம். ஜீ. நாதன்
(கொமார பாளையம்)

ஹிந்திப் படங்களைப் போல் குறைந்த செலவில் காதல் சமூகப் படங்களை நம் பட முதலாளிகள் ஏன் தயாரிக்கக் கூடாது?

புராணப் படங்களில் காதல் காட்சிகளைப் புகுத்துவதற்குக்கூட நம் பட முதலாளிகள் அதிகப் பணம் செல



வேகமாக தயாராகி வரும் "மருதநாட்டு இளவரசி"யில் எம். ஜி ராமச்சந்திரன் பிரதம பாகம் ஏற்று நடிக்கிறார்.

விடுவதில்லை. படத்தில் புகுத்தப் படாத காதல் காட்சிகளே அதிகப் பணத்தை விழுங்குகின்றன! ஆதலால் சமூகப் படங்களை எடுக்கத் தொடங்கி விட்டால் கூட படச் செலவு குறைந்து விடாது.

பதுருதீன் அஹமது
(கூத்தாநல்லூர்)

இந்தியாவில் முதன் முதலாக ஏற்பட்ட ஸ்டுடியோ எது? டைரெக்டர் யார்? படம் எது?

டி. ஜி. பால்கே என்பவர் இந்தியாவிலேயே முதன் முதலாக தம் வீட்டையே ஒரு ஸ்டுடியோவாக வைத்துக் கொண்டு, "ஹரிச்சந்திரா" படத்தை வெளியிட்டார். ஆகவே அவர் தான் இந்தியாவின் முதல் பட முதலாளி, டைரெக்டர்.

ச. ராஜாமணி (பம்பாய்)

சினிமாவில் நடிக்கும் ஒரு பெண் "பதிவிரதை" என்று பட்டம் பெற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

பெயருக்கு ஒருவரை மணந்து கொண்டுவிட வேண்டும்!

• • •

நூற்றில் எண்பது சினிமா நடிகைகளுக்கு குழந்தைகள் இல்லை என்று நினைக்கிறேன்.

நீர் நினைப்பது தவறு. நூற்றில் இருபது பேர்கள் மட்டுமே தங்களுக்குக் குழந்தைகள் இருப்பதாக ஒப்புக் கொள்ளுகிறார்கள்!

எஸ். பொன்னையா
(கிள்ளான், மலேயா)

யுத்தத்திற்கு முன் மலேயாவுக்கு "மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி" என்ற நாடகக் கம்பெனி வந்துபோயிற்று. அதில் நடித்தவர்கள் யாரேனும் இப்பொழுது சினிமாவில் நடிக்கிறார்களா?

அநேகமாக எல்லோரும் நடிக்கிறார்கள். காளி என். ரத்தினம், கே. கே. பெருமாள், கே. பி. கேசவன் இவர்கள் "ஒரிஜினல் பாய்ஸ்"கள் தானே!

ஆர். மஹாலிங்கம்
(ரஜெளரி, காஷ்மீர்)

ஒரு பேபி குமாரியாவது எங்ஙனம்?

பாவாடை கட்டுவதை விட்டு சித்தாடை உடுத்த ஆரம்பித்தால் பேபி குமாரிதான்.

சின்னப்பன் (ரஜெளரி, காஷ்மீர்)

சிவாஜி, பிருதிவி போன்ற பெரிய பெரிய வீரர்களெல்லாம் ஒரே ஒரு வாள் ஏந்தியுள்ளபோது, 'அல்லி ராணி'க்கு மட்டும் இரண்டு வாள் எதற்கு?

சில அநாமதேய எழுத்தாளர்கள் இரண்டு மூன்று விலை உயர்ந்த பேனாக்களை மாட்டிக்கொண்டு அலைகிறார்களல்லவா; அந்த ரகத்தைச் சேர்ந்ததாயிருக்கும் இது!

ஏ. சேகர் (சொக்கலிங்கபுரம்)

டைரெக்டர் கே. சுப்ரமண்யம் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

"இனி என்ன செய்யலாம்?" என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்!

எஸ். முத்தம்மாள் (தாழக்குடி)

பிழைக்கும் வழியில் சிட்டாடும் காட்சியில் ஒருவர் தலைகாணியை தலையில் வைத்துக் கொண்டு ஆடுகிறாரே? காரணம் என்ன?

"அவர் தலையில் இருப்பது களிமண் அல்ல; பஞ்சு" என்று மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்காகப் போலும்!

ஏ. கரீம் (அருப்புக்கோட்டை)

ஏ. எஸ். ஏ. சாமி ஜூபிடரின் முதலாளிக்கு சொந்தக்காரரா?

இல்லை; இந்த "ஆசாமி" அந்த ஸ்டுடியோவில் ஒரு முக்கிய ஊழியர் மட்டும்தான்.

எஸ். எம். ஜோஸப்
(பிரோஸ்பூர், கி—பஞ்சாப்)

"சந்திரகாந்தா"வில் நடித்த ஏ. கே. ராஜலக்ஷ்மி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் சின்னப்பாவை மணந்து கொண்டிருக்கிறாரா?

சின்னப்பாவை மணந்து கொண்டிருப்பவர் ஏ. சகுந்தலா. ராஜலக்ஷ்மி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று நான் சொல்வதற்கில்லை! ஆனால் அவர் படங்களில் நடிக்கவில்லை என்பது மட்டும் நிச்சயமான விஷயம்.

ஏ. மணிமேகலை (திருநகர்)

டி. ஆர். சுந்தரம் தற்போது என்ன படம் தயாரிக்கிறார்?

"மாயாவதி" தமிழ்ப் படத்தை அவர் பாதிக்கு மேல் தயாரித்து விட்டார்.

ஏ. கூடப்பன் (அருப்புக்கோட்டை)

ஹிந்தி சந்திரலேகாவை டைரெக்ட் செய்தவர் யார்?

அதை டைரெக்ட் செய்தவரும் எஸ். எஸ். வாஸனேதான்.

டி. ஆர். ஆர். (திருப்பூர்)

சுந்தரிபாயின் கணவர் யார்?

உஷ்! இதையெல்லாம் கேட்காதேயும். "கப்(பு) சுப்(பு)" என்றிரும்!

கமலா நாடகத்திலிருந்து திரும்புவதற்குள் பிரபாகரை எப்படியாவது மயக்கிவிட வனஜா முயலுகிறாள். "நவஜீவனம்" தமிழ்ப் படத்தில் ஸ்ரீராமன், ஜெயலக்ஷ்மி.

ஆந்திர தேசத்தில் இப்பொழுது காண்பிக்கப்பட்டு வரும் "ரக்ஷரேகா" தெலுங்குப் படத்தில் அஞ்சலி தேவி நடிக்கிறார்.

மைதிலி ரங்கநாதன் (நாகூர்)

நான், "ஒழிக" என்றொரு படத்தைத் தயாரிக்க நினைக்கிறேன். உம் அபிப்பிராயம் என்ன?

படம் வெளி வந்ததும் "ஒழிக! ஒழிக!" என்று ஜனங்கள் கூறுவது உம் காதில் விழுமே; பரவாயில்லையா?

ஏ. எம். சாபக்கண்ணு (ஊர்காம்)

நான் ஒரு சீர்திருத்த நாவலை எழுதியிருக்கிறேன். அதைப் படமுதலாளியாராவது ஏற்றுக் கொண்டு படமாக்குவார்களா?

உம்மைப் போல் மற்றும் அநேகர் சீர்திருத்த நாவலாக எழுதிக் குவித்தாலும், தம் பட முதலாளிகள் என்னவோ புராணப் படங்களைக் குவிப்பதை விட்டுவிட்டு சீர்திருத்தி விடமாட்டார்கள்.

ஜி. விஸ்வநாதம் (பம்பலபிட்டிய)

என். எஸ். கிருஷ்ணன் கொழும்புக்கு விஜயம் செய்தபோது சிங்கள பாஷையில் ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தாரே? அவருக்கு சிங்கள பாஷை தெரியுமா?

கிருஷ்ணன் தமக்குத் தெரியாத பாஷைகளைப் பேசிப் பிரசித்தி பெறுவதில் சமர்த்தர் என்ற விஷயம் "மங்கம்மா சபத"த்தைப் பார்த்தபின் கூடவா உமக்குத் தெரியவில்லை!

ஜி. சென்ன கிருஷ்ணன் (கொல்லபாளையம்)

சினிமா ஆப்ரேட்டர் வேலையைக் கற்றுக் கொள்ள எங்கே டிரெயினிங் அளிக்கப்படுகிறது?

வெளியூர்களிலுள்ள சில மட்டமான தியேட்டர்களில் படம் பார்ப்பவர்களுக்கு, 'அங்கு ஆப்ரேட்டர் டிரெயினிங்' அளிக்கப்படுவதாகவே தோன்றும்!

ஆர். மஹராஜ பிள்ளை (தாழக்குடி)

கே. எல். வி. வஸந்தாவின் வாழ்க்கை வர்ணனையை நீர் "குண்டூசி"யில் எழுதாத காரணம் என்ன?

ஏதோ பெரிய மர்மம் இருக்கும் என்று நீர் நினைத்துக் கொண்டிருந்தால் அது தவறு. அவர் சினிமாவில் இப்பொழுது நடிக்காததே காரணம்.

ஏ. அருள்ராஜ் (குற்றாலம்)

வேலைக்காரியில் கே. ஆர். ராமசாமி நைவேத்தியங்களைக் காலால் உதைத்துத் தள்ளுவதைப் பற்றி உம் அபிப்பிராயமென்ன?

நல்ல வேளை, 'அந்தக் காளிதேவியின் அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டு வைக்காமலிருந்தீரே! முன்பொரு வேடன் கடவுளைக் காலால் உதைத்து "நாயனார்" ஆனான் அல்லவா? ராமசாமியை வேண்டுமானால் நீர் "நாயனார்" என்றழையும்!

நீர்க்குமிழி (அரசம்பட்டி)

சினிமா நடிகைகள் சினிமா நடிகர்களை மணக்க விரும்புகிறார்களா? அல்லது மற்றோர்களை மணக்க விரும்புகிறார்களா?

படத்தில் கதாநாயகர்களையும், ஸ்டுடியோவில் டைரெக்டர்களையும், வீட்டில் பெரிய தனவந்தர்களையும் அவர்கள் 'மணக்க' விரும்புகிறார்கள்!

ஜே. பாஸ்கரன் (பங்களூர்)

என். எஸ். கிருஷ்ணனின் முதல் மனைவி உயிருடன் இருக்கிறாரா?

இருக்கிறார்.

டி. வி. பொன்னையா (மணச்சநல்லூர்)

டி. ஆர். ராஜகுமாரிக்கு விவாஹம் ஆகி இரண்டு குழந்தைகள் இருப்பதாக என் நண்பர் கூறுகிறார். இதை என்னால் நம்ப முடியவில்லை. நீர் என்ன சொல்லுகிறீர்?

உம்மாலேயே இதை நம்ப முடியாமலிருக்கும்போது என்னால் எப்படி ஐயா, நம்ப முடியும்?

ம. ஈஸ்வரன் (மலேயா)

இலங்கை 'மயில்' தவமணி தேவியின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

குரல் இனிமையற்ற தவமணியை சிலர் 'குயில்' என்று சொல்லிக் கொண்டிருந்ததற்குப் பதில் நீர் 'மயில்' என்று அழைத்தது மிகப் பொருந்தும். மயில் அழகாக தோகை விரித்தாடும், ஆனால் இவரோ அழகாக ஆடையுடுத்தி ஏதோ "ஒரு தினுசாய்" ஆடுவார். பட முதலாளிகளுக்கு என்னவோ அவரது விலாஸம் தேவையில்லாமற் போய்விட்டது. நீராவது கேட்டீரே! "ரோஸரி சர்ச் தெரு, சான்தோம், சென்னை—" என்று எழுதும்.

எச். வி. கோவிந்தசாமி (ஹஸன்)

குமாரி கமலா எத்தனை ஹிந்திப் படங்களில் நடனம் ஆடியிருக்கிறார்?

"ஷாதி", "காஞ்சன்" "அருமான்" "சந்த்னி" "விஷ கன்னிகை", "கிஸ்மத்", "ராம்ராஜ்யா" ஆகிய ஏழு படங்களில்.

ராமசாமி (தூத்துக்குடி)

வேலைக்காரியில் ஆனந்தன் பூஜை செய்து விட்டு வரும்போது அவனது நண்பன் மணி, "பைத்தியக்கார மனிதன். உழைத்து உழைத்துச் சேர்த்த காசை கற்பூரத்திற்காக கறியாக்குகிறானே?" என்று சொல்லி விட்டு உடனே சிகரட்டைப் பற்ற வைக்கிறானே. சிகரட் பிடித்து மட்டும் காசைக் கரியாயடிக்கலாமா?

"காசைக் கறியாய் அடிக்காமல் பட்டாசு வாங்கிச் சுடு" என்ற வேடிக்கைப் பழமொழியை நீர் கேட்டதில்லையா?

எம். பெரியசாமி (திருமங்கலம்)

புஷ்பவல்லியின் கணவரது பெயரென்ன? அவருக்கு எத்தனை குழந்தைகள்?

கணவர் பெயர் ரங்காச்சாரி. அவருக்குப் பிறந்துள்ளது ஒரேயொரு குழந்தை தான்.

பி. எஸ். பழநிவேலு (நாவலபிட்டிய)

கே. எல். வி. வஸந்தா தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

அவர் தற்போது பட முதலாளினியாக மாறிவிட்டார். கணபதி பிக்சர்ஸில் அவர் முக்கிய பங்குதாரர் என்று தெரிகிறது.

வெளிவந்துள்ள இடங்களிலெல்லாம் வெற்றி பெற்றுவரும் "நவஜீவன"த்தில் டி. ஏ. ஜெயலக்ஷ்மி பஞ்சாபி உடையில் நடனம் ஆடுகிறார்.

சங்கர சுப்ரமணியம் (பம்பாய்)

ராஜமுக்தியில் பாகவதர் பிரமாதமாகப் பாடியிருக்கிறாரே. இருந்தும் படம் தோல்வியுற்றது எதனால்?

இந்தப் படத்தை சென்னையிலேயே தயாரித்திருந்தால் இவ்வளவு தோல்வி ஏற்பட்டிருக்காது என்று நினைக்கிறேன்.

எம். மீராமொஹிதீன் (திருச்சி)

டைரெக்டர் கிருஷ்ணன்—பஞ்சு என்ற பெயர் ஒருவரைக் குறிப்பதா? அல்லது இருவரைக் குறிப்பதா? இவர்கள் யார்? கிருஷ்ணன் என்பது என். எஸ். கிருஷ்ணனா?

இல்லை. இவர்கள் பட உலகில் சமீபத்தில் டைரெக்டர்களாகியிருக்கும் இரு நபர்கள். முன்பு இவர்கள் படத்தை வெட்டி ஒட்டும் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

பொன்மாலைக் கவுண்டர்
(புதுப்பட்டி)

என். எஸ். கிருஷ்ணனும், டி. ஏ. மதுரமும் முதன் முதலில் சேர்ந்து நடித்த படம் எது?

"வஸந்தசேனா."

கே. பி. ஐசக் சாமுவேல்
(கவுந்தப்பாடி)

சக்ரதாரியில் சாந்துவாக நடிக்கும் நடிகை யார்?

அவர் புஷ்பவல்லியின் தங்கை சூர்யப்ரபா.

எஸ். எஸ். பாலன் (ஹட்டன்)

கே. எல். வி. வஸந்தா முதன் முதலில் நடித்த படத்தையும், அவரது விலாஸத்தையும் தெரிவிக்கவும்.

வஸந்தா நடித்த முதல் படம் "கந்த லீலா." விலாஸம்:—c/o மாடர்ன் தியேட்டர்ஸ், சேலம்.

கிரிமுத்துசாமி ஐயர் (திண்டுக்கல்)

டி. ஈ. வரதன் என்ன தொழில் செய்து கொண்டிருக்கிறார்?

"பவளக்கொடி"க்குப் பின் அவர் சினிமாத் தொழிலுக்குப் பதில் வேறு தொழிலை நாடவேண்டியதாகியிருக்கிறது. அவர் ஒரு முடிவுக்கு வந்த பின் தெரிவிக்கிறேன்.

எம். ரங்கஸ்வாமி (கோயமுத்தூர்)

நல்லதம்பியில் என். எஸ். கே., "ஆசி எனக்கு, வாதம் உனக்கு" என்கிறாரே இடையிலுள்ள "ர்" யாருக்கு?

பார்த்தீரா, மதுரத்தை மறந்தே போய் விட்டீரே!

கே. கே. கே. முஹம்மது
(கொழும்பு)

என். எஸ். கிருஷ்ணனுக்கு எத்தனை பிள்ளைகள்?

அவர் பெயரில் "பிள்ளை"யில்லையே தவிர அவருக்கு நிறைய பிள்ளைகள் இருக்கின்றனர். கணக்குத்தான் மறந்து விட்டது!

பி. ஜி. வெங்கடாசலம்
(ஜலகண்டபுரம்)

தேவதாஸியில் நடித்த லீலா தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

ஸ்டேட் புரொடக்ஷன்ஸாரின் "கனகாங்கி" தமிழ்ப் படத்தில் அவரைக் காணலாம்.

கிருஷ்ணமூர்த்தி (சமயநல்லூர்)

டி. ஆர். மஹாலிங்கமும், வஸந்த கோகிலமும் சேர்ந்து நடிக்கப் போவதாய் விளம்பரப்படுத்தப்பட்ட காளிதாஸ் படம் என்னவாயிற்று?

இனிமேல்தான் அது தயாரிக்கப்பட வேண்டும். அதற்குள் ஆவதற்கு என்ன இருக்கிறது?

என். பாலநரசிம்மன்
(ஒடுவன்குறிச்சி)

தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய பாஷைப் படங்களில் நடிக்கும் ஜெயம்மாவின் தாய் பாஷை எது? சொந்த ஊர் எது?

மைசூரைச் சேர்ந்த அவரது தாய் பாஷை கன்னடம்.

கணபதி பிக்சர்ஸார் வெகு துரித மாய் தயாரித்துவரும் "மாயாவதி" தமிழ்ப் படத்தில் அஞ்சலி தேவி.

“மருத நாட்டு இளவரசி” ஜானகி)யின் அந்தப் பார்வை கதாநாயகனை மயக்குவதற்கு போலும்! அவனென்ன வசப்படாமலா போய்விடுவான்?

பார்வை தன் பக்கம் இருந்தாலும் அந்தக் கதாநாயகியின் எண்ணம் வேறி டத்தில் இருப்பதற்காக வில்லன் எம். ஜி. சக்ரபாணி ஏளனச் சிரிப்புச் சிரிக்கிறார்!


ரத்னகுமார்

மருதநாட்டு
இளவரசி

மதநாட்டு இளவரசி



அகில இந்தியப் புகழ் பெற்ற நடிகர்
நாகய்யா முதலாளிக்கும் தொழிலாளிக்
கும் ஒற்றுமை ஏற்படுத்தி வைக்கிறார்
“ நவஜீவன ”த்தில்

இரவு தற்செயலாய், தங்க சேர்ந்த இடத்தில் தங்கப் பதுமை (பானுமதி) கிடைக்கிறது—"ரத்ன குமாரி"ல் சின்னப்பாவுக்கு!

இந்த மாதிரி ஆடையலங்காரத்து டன் மஹாலிங்கத்தை "மாயாவதி" தமிழ்ப் படத்தில் சந்திக்கலாம்.

நுனிப்புல்



ஹாலிவுட், சினிமாத் தொழிலுக்கே மூலஸ்தானம் என்பது பிரசித்தமான விஷயம். அங்கே வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பல ஆயிரம் பேர்கள் அவதிப்படுவதாகச் செய்திகள் வருகின்றன. அப்படிப்பட்ட பயங்கரமான செய்திகளைப் படித்துவிட்டு, நம்முடைய படத் தொழிலின் கதியை நினைத்தால் கலக்கமாகத்தான் இருக்கிறது.

• • •

நம் படத் தொழிலில் இப்பொழுது அசாதாரணமான ஒரு மந்த நிலைமை இருந்து வருவது கண் கூடான விஷயம். பல படங்கள் 'அறிவிப்பு' அளவிலேயே நின்றிருப்பதும், சில படங்கள் பாதி தயாராகி 'அந்தர'த்திலே நிற்பதும், ஒரு சில படங்கள் மட்டுமே 'ஆமை வேகத்தி'ல் தயாராகி வருவதும் இந்த மந்த நிலைமையினால் தானே!

• • •

'சினிமா வந்ததினால்தான் நாடகம் நசித்து விட்டது' என்று குறைப்பட்டுக் கொண்ட 'நாடக அபிமானி'களுக்கு இது மகிழ்ச்சி அளிக்கும் காலமாகி இருக்கிறது. நாளைக்கு ஒரு நாடகக் கம்பெனியாக முளைத்து வருவதைத்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

• • •

இப்படி நாடகத்திற்கு திடீரென்று ஒரு 'மவுஸ்' ஏற்பட்டிருப்பதன் காரணம்தான் என்ன? நாடகக் கலையின் மீது ஏற்பட்டிருக்கும் பற்றுதலா? இல்லை. சினிமாத் துறையில் ஏற்பட்டிருக்கும் மந்தம்தான் உண்மையான காரணம்.

• • •

திரையில் தோன்றி வந்த நடிகர்கள் பலர், தொழிலில் ஏற்பட்டிருக்கும் மந்த நிலையினால் நடிக்க சந்தர்ப்பம் கிடைக்காது போகவே, நாடகத்தின் மீது சிரத்தை காட்ட ஆரம்பித்தனர். சிலர் ஒன்றுகூடி நாடகக் கம்பெனிகளை ஆரம்பித்து நடத்திவருகிறார்கள். இன்று தமிழ் நாட்டில் புதிதாக ஆரம்பமாகியுள்ள நாடகக் கம்பெனிகளிலெல்லாம் உள்ளே புகுந்து பார்த்தால், நமது படங்களில் சில்லறை வேஷங்களில் நடித்த பலரைக் காணலாம்!

• • •

ஒரு விஷயத்தைக் குறித்து எழுதும் போது அதைப் பற்றிய நல்லது கெட்டது இரண்டும் நினைவுக்கு வருகின்றன. சில நல்ல நாடகக் கம்பெனிகள் இப்பொழுது தமிழ் நாட்டில் இருக்கின்றன. அதே சமயம் பல மோசமான கம்பெனிகளும் இருப்பதை மறந்து விட முடியாது.

• • •

இந்தக் கம்பெனிகளின் நாடகம் மோசமாக இருப்பதை மட்டும் நான் கூறவில்லை. அவர்களது கம்பெனி நிர்வாகம், நடிகர்களை நடத்தும் முறை, அத்தனையும் கூட மோசமாக இருப்பதை நினைக்கும்போது வருத்தமாகத்தான் இருக்கிறது.

டி. இ. கிருஷ்ணமாச்சாரி என்ற நடிகரின் முயற்சியினால், சென்னையில் பாரதமாதா பாலகான சபா என்ற ஒரு நாடகக் கம்பெனி ஆரம்பமாயிற்று. வெளியூர்களிலிருந்தெல்லாம் நடிகர்கள் வந்து சேர்ந்தார்கள். இக் கம்பெனியின் வீரசிம்மன் என்ற நாடகம், மூன்றே தினங்கள் சென்னையில் நடந்தது. அவ்வளவு 'அமோக வெற்றி!'

• • •

வீரசிம்மன் நாடகம் எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும். அதைப் பற்றி நமக்கு அக்கரையில்லை. கம்பெனியின் நடிகர்களை நடத்திய முறைதான் அநாகரீகமாகி விட்டது. இந்தக் கம்பெனியை நம்பி பல மைல்களுக்கு அப்பாலிருந்தெல்லாம் நடிகர்களாக வந்து சேர்ந்திருந்த டலருக்கும், தினம் அநேக நாட்கள் கிடைத்த ஆகாரம், பயத்தம் பருப்புக் கஞ்சிதான். அதுவும் அளந்து ஒரே ஒரு டம்ளர்தான்!

• • •

இந்தக் கம்பெனியின் நிர்வாகஸ்தரின் செய்கைகளினால் மனம் வெறுத்து, வேல்சாமி என்ற ஒரு நடிகர், ஒரு வாரம் உண்ணாவிரதம் (தவறு கஞ்சி குடிக்கா விரதம்!) இருந்தார்.

• • •

நாடகம் ஆரம்பிப்பதற்கு முன்னால் திருஷ்டி கழிப்பதற்காக ஒரு தேங்காயை நடிகர்களைச் சுற்றி, பிறகு அதை உடைப்பது எங்கும் வழக்கம். இந்தக் கம்பெனியார் நடத்திய மூன்று நாடகங்களில் ஒரு நாள் தேங்காய் கூட கிடைக்காமல், அந்த வழக்கத்தையும் விட மனமில்லாமல் - ஒரு பலூனை நடிகர்களைச் சுற்றி உடைத்தார்களாம்!

• • •

மேற் கூறிய கம்பெனியை ஒத்ததுதான் முத்தமிழ் நாடக சபாவும். இந்தக் கம்பெனியை ஆரம்பித்து நடத்தியவர் நடிகர் கே. ஆர். ராம்சிங். நஷ்டமாகி விடவே நடிகர்கள் அனைவரையும் சென்னையிலே தவிக்க விட்டுவிட்டு அவர் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டார்.

• • •

எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ போய்விட்டேனே! நம் சினிமாத் தொழிலில் மந்தம் ஏற்படவே அதில் சம்பந்தப்பட்டிருந்த பலர் ஜீவனத்திற்காக வேறு தொழில்களில் பிரவேசித்திருக்கிறார்கள்.

• • •

காமெடியன் டி. வி. சேதுராமன் இப்பொழுதெல்லாம் வாஸனை மிகுந்த மனிதராகி விட்டார். அவர் கொஞ்ச தூரத்தில் வரும்போதே வாசனை மூக்கைத் துளைக்கும். காரணம் அவர் ஒரு வாசனைத் திரவிய வியாபாரி ஆகியிருப்பதுதான்!

• • •

'டி. வி. எஸ். ஆர். அண்டு கோ' என்று விலாஸம் போட்ட பையைத் தூக்கிக் கொண்டு வெளியே கிளம்பும் அவரை, யாராவது 'என்ன ஸார் இது?' என்று கேட்டால் போதும். "ஆமாம் ஸார். சினிமா மார்க்கெட் ரொம்ப 'டல்லா'ப் போச்சு. எதாவது பிழைப்பு வேண்டுமல்லவா! உங்களுக்கு அத்தர், சென்ட், ஊதுபத்தி..." என்று ஆரம்பித்து விடுகிறார்.

• • •

முன்னெல்லாம் சுசீலா என்ற ஒரு நடிகை பிரபலமாக இருந்தாரே அவரை எங்கே இப்பொழுது படங்களில் காணோம் என்ற சந்தேகம் பலருக்கு இருக்கலாம். அவர் நிம்மதியாக, சென்னை ராயபுரத்திலிருந்து கொண்டு, பாக்குத் தூள் வியாபாரம் செய்து வருவது யாருக்குத் தெரியும்?

• • •

கொஞ்ச நாட்களுக்கு முன் சக்கரவர்த்தி—ரங்கராஜ் என்ற பெயர்கள் தமிழ்ப் பட உலகில் பிர

பலமாக இருந்தன. கிரேட் ஈஸ்டர்ன் பிக்சர்ஸை ஆரம்பித்து மூடிவிட்டுப் போனவர்கள் இவ்விருவரும். இவர்களில் சக்ரவர்த்தி இப்பொழுது நெல்லிக்குப்பம் பாரி கம்பெனியில் உத்தியோகம் பார்த்து வருகிறாராம்.

• • •

டைரெக்டர் சுப்ரமண்யத்தின் கலைவாணி பில்ம்ஸில் கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்ற ஒருவர் மானேஜராக இருந்து வந்தார். அவர் இப்பொழுது மைலாப்பூர் கச்சேரிரோடில் ஒரு வெற்றிலை பாக்குக் கடையை நடத்தி வருகிறார்.

• • •

ஜெமினி படங்களில் 'எக்ஸ்ட்ரா' நடிகராக நடித்து வந்த ஒருவர் இப்பொழுது 'தரகு' வியாபாரத்தில் முனைந்திருக்கிறார். அவர் முன்பு ஒரு மாதத்தில் சம்பாதித்து வந்த தொகையை இப்பொழுது ஒரே நாளில் சம்பாதித்து விடுவதாகப் பெருமையுடன் அவர் கூறிக் கொள்கிறார்.

• • •

பிரபல நாடகக் கம்பெனி ஒன்றில் பெண் வேஷங்களில் நடித்து வந்தார் ஒரு நடிகர். சினிமாத் துறையில் பிரவேசித்தால் தமக்கு அமோகமான ஆதரவு இருக்கும் என்ற ஆசை அவருக்கு ஏற்பட்டது. அது நம்பிக்கையாக மாறவே, கம்பெனியை உதறித் தள்ளிவிட்டு சென்னைக்கு வந்தார்.

• • •

சென்னைக்கு வந்து நாடகக் கம்பெனி ஒன்றை சகாக்களுடன் சேர்ந்து ஆரம்பித்தார். தாம ஏற்கெனவே நடித்து வந்த நாடகக் கம்பெனியின் நாடகம் ஒன்றை கொஞ்சம் மாற்றி, தாம் எழுதியதாகக் கூறி அதில் கதா நாயகனாகவும் நடித்தார்.

• • •

எண்ணியபடிதான் எதுவுமே நடப்பதில்லையே! முதலில் ஒரு படத்தில் சிறு பாகத்தில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. பிறகு ஒரு படத்தில்

ராஜா வேஷம் போட்டதும் தானாகவே "ஜெயஜெய கோகுல பாலா" கிளம்புகிறாப் போலிருக்கிறது! ('ரத்னகுமார்' படத்தில் என். எஸ். கிருஷ்ணன்.)

ஆட இடம் கிடைத்தது. அவ்வளவே தான்! தொழில் சம்பந்தப் பட்டவர்கள் அந்த நடிகருக்கு திரைக்கு ஏற்ற முக வெட்டு இல்லை யென்று சொல்லிக் கொள்கிறார்கள்.

• • •

இதனால் அந்த நடிகர் தயங்கி விடவில்லை. சினிமாத் தொழில் அவருக்கு இடங் கொடுக்கா விட்டால் முன்னுக்கு வர வேறு சந்தர்ப்பமே இல்லாமலா போய்விடும்? நண்பர் ஒருவர் ஆரம்பித்துள்ள ஒரு பத்திரிகையில் தொண்டு ஆற்றும பாக்கியம் பெற்று விட்டார்!

• • •

அவர், தான் தொண்டாற்றும் பத்திரிகையில் தமக்கு ஆதரவு அளிக்காத சினிமாத் தொழிலையே — (அதிலுள்ள பிரமுகர்களைத்தான்!)— வெளுத்து வாங்கி வஞ்சம் தீர்த்துக் கொள்ளாமலா விடுவார்!

சில படங்களுக்கு கதை, வசனம், பாட்டுகள் எழுதியுள்ள, சுந்தர மான பெயர் கொண்ட ஒருவர், மேற் குறிப்பிட்ட பொறுப்புகளுடன் டை ரெக்ஷன் பொறுப்பையும் கூட ஏற் றுக் கொண்டு ஒரு படத்தைத் தயா ரித்து வர கோவைக்குப் போனுர்.

• • •

பல] ஆயிரம் ரூபாய்கள் செலவா னதுதான் கண்ட பலன். படம் பேசவில்லை. மேற் குறிப்பிட்ட ஆசாமி சென்னைக்குத் திரும்பி விட்டார். இப்பொழுது அவர் திரு வல்லிககேணியில் மளிகைக் கடை ஒன்றையும், வெண்ணைக் கடை ஒன்றையும் நடத்தி வருகிறுர்.

• • •

கௌசல்யா பரிணயம் என்று ஒரு தமிழ்ப் படம் வெளிவந்தது பலருக்கு மறந்தே போயிருக்கலாம். அதில ராவணஞக நடித்த வி. வி. ராமச்சந்திரன் அதற்குப் பிறகு பல படங்களில் உப பாத்திரங்களில் நடித் திருக்கிறுர். ஆனல் இப்பொழுதோ திருச்சியில் ஒரு ஸோடா பாக்டரியின் கூட்டாளியாக அவர் இருந்து வரு கிறுர்.

• • •

பிரபல நடிகையாக இருந்த ஒருவ ரின் 'அபிமான கணவராக' இருந் தார் ஒருவர். அந்த வேலைக்கு முற் றுப் புள்ளி விழவே, அவர் 'டெக்ஸ் டைல்ஸ்' தொழிலை ஆரம்பித்தார். பெரிய மனிதர்களின் ஆதரவு இருந் தும் அந்தத் தொழில் லாபம் அளிக்க வில்லை. ஆதலால் அவர் ஒரு சாதா ரண நடிகையைப் பிரபலமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறுர். இதற் கிடையில் சென்னையில் தம் பங்களா விலேயே ஒரு மோட்டார் தொழிற் சாலையையும் வைத்து நடத்தி வரு கிறுர் அவர்.



பம்பாய் ஸ்டேட் புரொடக்ஷன்ஸார் "கனகாங்கி" என்ற தமிழ்ப் படத்தைத் தயாரித்திருக்கின்றனர். அதில் லீலா, கங்காதரன், ஸ்ரீநிவாஸன் ஆகியோர் தோன்றும் ஒரு காட்சி இது.

இது செய்தி

ரஷ்யப் படத்திற்குத் தடை

தன் நாட்டை அவன் பாதுகாக்கிருன் என்ற ரஷ்யப் படத்தை மாகாணத்தில் எங்குமே திரையிடக் கூடாதென, சென்ற மாதம் 26-ம் தேதி, சென்னை சர்க்கார் தடை விதித்திருக்கின்றனர்.

அலிகான் - ரீடா திருமணம்

கோடீஸ்வரர் ஆகாகானின் புதல்வர் அலிகானுக்கும், சினிமா நடிகை ரீடா ஹேவொர்த்துக்கும் சென்ற மாதம் 27–ம் தேதி பிரான்ஸில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. ரீடா சினிமாவில் நடிப்பதை நிறுத்தப்போவதில்லையென்றும், இவ்வருஷக் கடைசியில் அவரே ஒரு படத்தை சொந்தத்தில் தயாரிப்பாரென்றும் தெரிகிறது.

சினிமா தியேட்டர்கள் ஸ்டிரைக்

தமாஷா வரி உயர்வைக் கண்டித்து, இம் மாதம் முதல் தேதி இந்தியா வெங்கும் தியேட்டர்களை மூடுவதாக இருந்த முடிவை மாற்றி, இம் மாதம் 30–ம் தேதி ஏக காலத்தில் தியேட்டர்களைமூடுவதாகத் தீர்மானித்திருக்கிருர்கள்.

பிலிம் ஆலோசனை போர்டு

சென்ற மாதம் 21–ம் தேதி மத்திய சர்க்கார் பிலிம் ஆலோசனை போர்டு ஒன்றை ஸ்தாபித்திருக்கின்றனர். ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி, பிராங்க் மேடலிஸ், எம். டி. வியாஸ், எஸ். ஏ. ஐயர், பி. சி. செளத்ரி, (மத்ய சர்க்கார் தகவல் இலாகா காரியதரிசி) ஆகியவர்களை அதன் அங்கத்தினர்களாக நியமித்திருக்கின்றனர்.

தகவல் இலாகாவின் பிலிம் பிரிவு தயாரிக்கும் செய்திப் படங்களைப் பார்வையிடுவதும், அது விஷயமான யோசனைகள் கூறுவதும்தான் இந்த போர்டின் வேலை.

இந்திய சர்க்காரின் செய்திப் படங்கள்

இம் மாதம் 3-ம் தேதியிலிருந்து எல்லா தியேட்டர்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட செய்திப் படங்களை நியாயமான வாடகைக்கு, திரையிட இந்திய சர்க்கார் சப்ளை செய்கிறது.

ஆங்கிலம், ஹிந்துஸ்தானி, தமிழ், தெலுங்கு, வங்காளி ஆகிய ஐந்து பாஷைகளில் இந்த செய்திப் படங்கள் சப்ளை செய்யப்படுகின்றன.

பிலிம் ஆலோசனை போர்டின் கூட்டம்

மத்திய சர்க்காரால் நிறுவப்பட்ட பிலிம் ஆலோசனை போர்டின் கூட்டம் சென்ற மாதம் 28-ம் தேதி, செய்தி ஒலி பரப்பு இலாகா காரியதரிசி ஸ்ரீ. பி. ஸி. செளத்ரி தலைமையில் கூடிற்று. இந்திய சர்க்காரின் பிலிம் பகுதி தயாரித்த சில படங்களை அவர்கள் பார்த்தார்கள்.

இந்தியாவில் ஏறக்குறைய இரண்டாயிரம் தியேட்டர்கள் இருக்கின்றனவென்றும், இவைகளில் பாதி தியேட்டர்கள் டாகுமென்டரி படங்கள், செய்திப் படங்களுக்காக வாரத்துக்கு ஐந்து ரூபாய் வாடகை கொடுக்குமென்றும், மற்றவைகளிடமிருந்து ஐம்பது ரூபாய் வசூலிக்கப் படும் என்றும் சுமார் இருபத்தி ஐந்து பெரிய தியேட்டர்கள் மட்டும் வாரத்துக்கு எண்பது ரூபாயிலிருந்து

நூற்றி ஐம்பது ரூபாய் வரை வாடகை கொடுக்குமென்றும் சொல்லப்பட்டது. இ படி வாங்கும் வாடகை மொத்த வசூலில் ஒரு சத விகிதம் தான் இருக்குமாம்.

சினிமா மூலம் கல்வி போதனை

மைசூரில் உயர் நிலைப் பள்ளிகளிலும், மத்திய பள்ளிகளிலும் அடுத்த கல்வி வருஷத்திலிருந்து, திருஷ்டி போதனை முறை மூலம் கல்வி பரப்ப மைசூர் சர்க்கார் ஒரு திட்டத்தை அங்கீகரித்திருக்கிறது.

சுப்ரமண்யத்தின் வேண்டுகோள்

மத்திய சர்க்காரால் நிறுவப்பட்டுள்ள பிலிம் ஆலோசனை போர்டில் சென்னை மாகாணத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகளாவது சேர்க்க வேண்டுமென, தென்னிந்திய பிலிம் சேம்பர் தலைவர் ஸ்ரீ. சுப்ரமண்யம், செய்தி, ஒலி பரப்பு இலாகா மந்திரி ஸ்ரீ. திவாகருக்கு ஒரு தந்தி அடித்திருக்கிறாராம்.

ஸாபு மீது வழக்கு

யானைக்காரப் பையன் என்று புகழ் பெற்ற இந்திய நடிகரான ஸாபு மீது, மிஸ். பிராண்டா ஜூலிக்கா என்ற பிரிட்டிஷ் நடிகை ஒரு விசித்திரமான வழக்கு தொடர்ந்திருக்கிறாள்.

ஸாபுவுக்கும் தனக்கும் 1947-ம் வருஷத்தில் நெருக்கமான நேசம் ஏற்பட்டதாகவும், தான் 1947-ம் வருஷம் ஆகஸ்டிலிருந்து 1948-ம் வருஷம் வரை ஹாலிவுட்டில் ஸாபுவுடன் தங்கியிருந்ததாகவும், 1948-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 12-ம்

பிரபல சாந்தாராமின் "அப்னா தேஷ்" ஹிந்திப் படம் 'நம் நாடு' என்ற பெயரில் தமிழ்ப் படமாக வருகிறது. அதில் ஆர். வி. ஈஸ்வர் ஹரீஷாகவும், குமாரி விமலா தங்கை சரளாவாகவும் நடிக்கின்றனர்.



நெற்றியில் காயமும், வாயில் ரணகீதமுமாக இருக்கிறார் மிஸ்டர் உமேஷ் சர்மா. ராஜ்கமல் கலாமந்திர் தமிழ்ப்படுத்தி வெளியிடும் "நம் நாடு" தமிழ்ப் படத்தில் இவரைச் சந்திக்கலாம்.

தேதி தனக்குப் பிறந்துள்ள பெண் குழந்தை ஸாபுவுக்கே பிறந்ததென்பதும் அவள் வழக்கு. அவள் தன் மனுவில் மாதம் குறைந்தது ஐநூறு டாலர்களாவது குழந்தையின் சம்ரக்ஷணைக்காகத் தனக்குத் தரவேண்டுமெனக் கூறியிருக்கிறாள்.

ஸாபு அந்த நடிகையைத் தெரியுமென்றும், ஆனால் அவளது குற்றச்சாட்டுகள் முழுப் பொய்என்றும்கூறியிருக்கிறார். இதை எதிர்த்து கடைசி வரை தாம் வழக்காடப் போவதாகவும் ஸாபு தெரிவித்திருக்கிறார்.

கிருஷ்ணன் கதா காலக்ஷேபம்

பட்டுக் கோட்டையைச் சேர்ந்த அழகிரிசாமியின் குடும்ப நிதிக்காக என். எஸ். கிருஷ்ணன் சென்ற மாதம் 29-ம் தேதி காந்தி மகான் கதை (வில்லுப் பாட்டு), 'கிந்தனார்' (கதாப் பிரசங்கம்) இவைகளை தஞ்சை எஸ். பி. ஜி. மைதானத்தில் நடத்தி, நிதி வசூலித்து உதவினாராம். இதற்கு ஸி. என். அண்ணாத்துரை தலைமை வகித்தாராம்.

'ஹாலிவுட்' டின் முறையீடு

இந்தியாவின் மிகக் கடுமையான தணிக்கை விதிகளைக் கண்டு ஹாலிவுட் சினிமாத் தொழில் பிரமுகர்கள் பீதி யடைந்திருக்கின்றனர். இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், இந்திய சர்க்காரைத் திருப்திப் படுத்துவது மிகவும் சிரமமாகி விட்டதென அமெரிக்க பிலிம் முதலாளிகள் முறையிடுகின்றனர்.

(1) ஜனங்களை கவர்ச்சிக்கும் முறையில் கள்ளக் காதலை வெளியிடுவதாக இருக்கிறது. (2) துர் நடத்தைக் குற்றங்களுக்கும் பலாத்காரங்களுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. (3) ஒரு கொலையில் பொழுது போக்கு அம்சம் இல்லை. இந்த மூன்று காரணங்களைக் காட்டி ஹாலிவுட்டின் மூன்று முழுநீளப் படங்களை திரை யிடக் கூடாதென தடை செய்யப்பட்டு விட்டனவாம்.

மதுவருந்தும் காட்சிகளை யெல்லாம் இந்தியா கத்தரித்து விடுகிறது என்றும், ஆகவே பல படங்களில் பெருத்த மாறுதல்கள் செய்ய வேண்டி யிருக்கிறது என்றும் ஹாலிவுட் முறையிடுகிறது.

சினிமாத் தொழில் பற்றிய விவரங்கள்

உலகிலேயே சினிமாத் தொழிலில் முதல் ஸ்தானம் வகிப்பது ஹாலிவுட். அதற்கு அடுத்தபடி இந்தியாதான். ஒவ்வொரு வருஷமும் இந்தியாவில் இருபது கோடி அடிகள் கச்சா பிலிம் உபயோகிக்கப்படுகிறது. மூன்னூறு படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இத்தொழிலில் பிரதி வருஷமும் இருபது கோடி ரூபாய்கள் மூலதனம் போடப்படு

கிறது. சுமார் லக்ஷம்பேர் இத் தொழில் மூலம் ஜீவனம் நடத்துகின்றனர்.

1921ம் வருஷம், முதல் சலனப் படம் பம்பாயில் திரையிடப்பட்ட சமயம் அது ஒரு பெரிய அதிசயமாகக் கருதப்பட்டது. இன்று இந்திய சினிமாத் தொழிலில் பம்பாய்தான் முன்னணியில் நிற்கிறது. இன்னும் ஒரே வருஷத்திற்குள் இந்தியாவில் வர்ணப் படம் தயாரிக்கவும் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

பம்பாய்க்கு அடுத்தபடி இத் தொழிலில் சென்னை தான் முன்னணியில் இருக்கிறது. சென்னையில் வருஷத்தில் சராசரி ஐம்பது படங்கள் தயாரிக்கப்படுகின்றன. கல்கத்தாவில் நாற்பது படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்தியாவில் தயாராகும் படங்களுக்குத் தகுந்தபடி தியேட்டர்கள் கிடையாது. அதிகமான ஜனத்தொகையுள்ள இந்தியாவில் இரண்டாயிரம் தியேட்டர்கள் தான் இருக்கின்றன.

கே. பி. எஸ். பிரார்த்தனை

கரூரில் நடைபெற்ற மாரியம்மன் உத்ஸவத்தில், சென்ற மாதம் 23-ம் தேதி நடிகை ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் மஞ்சள் உடையுடன் அம்மன் சந்நிதிக்கு தன் கரங்களில் அக்னிச் சட்டியை ஏந்திச் சென்று தமது பிரார்த்தனையைச் செலுத்தினாராம்!

ஜெமினியில் தங்கமணி

நாட்டியத்தில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் ஆர். தங்கமணி ஜெமினியில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய தில்லானா ஜெமினி தயாரித்து வரும் கார்ஸிகன் பிரதர்ஸ் தமிழ், ஹிந்தி ஆகிய இரு படங்களிலும் இருக்குமாம். நடனம் நடராஜின் மேற்பார்வையில் தில்லானா ஒத்திகைகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் தில்லானாவுக்கு பிரபல மிருதங்க வித்வான் மாங்குடி துரைராஜ அய்யர் மிருதங்கம் வாசிக்கிறார்.

தருமபுர ஆதீன வித்வான்கள்

நடிகை ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளையும், நடிகர் ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதரையும் தம் ஆதீன வித்வான்களாக அங்கீகரித்து பொன் பதக்கம் வழங்கியிருக்கிறார் தருமபுர ஆதீன மடாதிபதி. சுந்தராம்பாளுக்கு "ஏழிசை வல்லபி" என்ற பட்டத்தையும், பாகவதருக்கு "ஏழிசை மன்னன்" என்ற பட்டத்தையும் அளித்திருக்கிறார்.

தமாஷாக்களின் காலம்

நாடகம், சினிமா போன்ற தமாஷாக்கள் நடத்தும் தியேட்டர்களை திறந்து வைக்கக் கூடிய காலத்தை சென்ற மாதம் 24-ம் தேதி சென்னை சர்க்கார் நிர்ணயித்திருக்கின்றனர். ஞாயிற்றுக் கிழமைகளிலும், விடுமுறை தினங்களிலும் காலை 9 மணிக்கு முன்னதாகவோ, மற்ற தினங்களில் பகல் ஒரு மணிக்கு முன்னதாகவோ திறக்கக் கூடாது. அதே போல இரவு 1-30 மணிக்கு முன்னதாகவே மூடப்பட வேண்டும். இது ஜூலை முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வருமாம்.

தேவி நாடக சபைக்குப் பாராட்டு

தஞ்சை ஸ்ரீ ராமநாதன் செட்டியார் ஹாலில் சென்ற மாதம் 29-ம் தேதி முதல் பெண் என்ற நாடகத்தை தேவி நாடக சபையினர் நடத்தி வருகின்றனர். முதல் நாள் நாடகத்திற்கு பாரதி தாசன், ஸி. என். அண்ணாத்துரை, என். எஸ். கிருஷ்ணன், சென்னை மாஜி மேயர் ராதாகிருஷ்ண பிள்ளை ஆகியோர் விஜயம் செய்து, நாடகத்தையும், சபாவையும் பாராட்டிப் பேசினார்கள்.

'வேலைக்காரி' நூறாவது நாள் கொண்டாட்டம்

இம்மாதம் 3-ம் தேதி வேலைக்காரி நூறு நாட்கள் வெற்றிகரமாக ஓடியதைக் கொண்டாடவும், கதாசிரியர்

சி. என். அண்ணாத்துரையையும், டைரெக்டர் எ. எஸ். எ. சாமியையும் பாராட்டவும் ஒரு கூட்டம் கோவையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஆஸ்தான வித்துவான் ஸ்ரீ. வெ. ராமலிங்கம் பிள்ளை தலைமை வகித்தார். ஸ்ரீமான்கள் வ. ரா., சின்ன அண்ணாமலை முதலியவர்களும் கதாசிரியரைப் பெரிதும் பாராட்டினார்கள்.

ஸ்ரீ. அண்ணாத்துரை பேசுகையில், தம் அரசியல கருத்துக்களைப் படத்தில் புகுத்துவதில்லை என்றும், கோயில்களை இடிக்கும் நோக்கம தனக்கு இல்லை யென்றும், கோயில்களில் உத்சவத்திற்காக ஏராளமாக பணம் செலவழிப்பதை விட்டு, அதை கலை, கல்வி வளர்ச்சிக்காகச் செலவுசெய்ய வேண்டும் என்பதே தம் அபிப்பிராயம என்றும் தெரிவித்தார்.

டைரெக்டர் சாமி கதாசிரியரைப் பாராட்டி விட்டு தாம் சர்வ தேசப் படம் ஒன்றைத் தயாரிக்க முயற்சித்து வருவதாகத் தெரிவித்தார்.

பின் டைரெக்டருக்கும் கதாசிரியருக்கும் பரிசுகள் வழங்கப் பட்டன.

ஏவி. எம். அடுத்தவை

ஏவி. எம். ஸ்டுடியோஸார் அடுத்தபடி சி. என். அண்ணாத்துரை எழுதிய ஓர் இரவு என்ற சமூகப் படத்தையும, புலந்திரன் என்ற புராணப் படத்தையும் தயாரிக்க திட்டம போட்டிருக்கிறாகள. டி. ஆர். மகாலிங்கம் ஒரு படத்தில நடிப்பார்.

எம். வி. மணி, ஜெயகௌரி

சுகுமார் ப்ரொடக்ஷன்ஸின் மச்சரேகாவிற்காக நடிகர் எம். வி. மணியும, ஜெயகௌரியும ஒப்பந்தம செய்யப்பட்டிருககின்றனர்.

ஜெமினியில் மாயா பானர்ஜி

பிரபல வட நாட்டு நடிகையான மாயா பானர்ஜியை ஜெமினி ஸ்டுடியோஸார தாககள தயாரிக்கும் நிஷான் என்ற ஹிந்திப் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளனர்.

மங்களா

ஜெமினி ஸ்டுடியோஸார் தாங்கள் தயாரிக்கப் போகும் மங்கம்மா ஹிந்திப் படத்திற்கு மங்களா என்று பெயர் கொடுத்திருக்கிறார்களாம்.

ஸ்ரீநகரில் சந்திரலேகா

இம்மாதம் 9-ந் தேதி ஸ்ரீநகர், அம்பரிஷா டாக்கீஸில் ஜெமினி சந்திரலேகா திரையிடப் பெறறது. முதல் நாள் ஆட்டத்தை காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா, ஆரம்பித்து வைத்து, படத்தை பெரிதும் புகழ்ந்து பேசினார்.

வனசுந்தரி

கிருஷ்ணா பிக்சர்ஸார் அடுத்தபடி வனசுந்தரி படத்தைத் தயாரிக்கத் திட்டம் போட்டிருக்கின்றனர். ஷி (அவள) என்ற பிரபல ஆங்கிலக் கதை ஒன்றைத் தழுவியதாக இருக்குமாம் இப்படத்தின் கதை. கதை, வசனம் "இளங்கோவன்" எழுதுகிறார். பாட்டுகளை உடுமலை நாராயண கவி இயற்றுகிறார். சங்கீத டைரெக்ஷன் பொறுப்பை குன்னக்குடி வெங்கட்டராம அய்யரும, சிதம்பரம் ஜெயராமனும் ஏற்றுக் கொண்டிருக்கினறனர். பி. யு. சின்னப்பா, டி. ஆர். ராஜகுமாரி, டி. எஸ். பாலையா, வரலஷ்மி, கிருஷ்ணன், மதுரம முதலியவர்கள இதில நடிக்கின்றனர். லலிதா பத்மினி, எம். கே. சரோஜா இவர்களது நாட்டியமும, டி. கே. பட்டம்மாள், பி. ஏ. பெரியநாயகி இவர்களது பின்னணி கீதமும படத்தில் இருக்கும்.

சினிமா ரஸிகர்கள் கூட்டம்

இம்மாதம் 1ம் தேதி சினிமா ரஸிகர்களின் கூட்டம் ஒன்று ஸ்ரீ. கோதாரியின் தலைமையில நடைபெற்றது. ஸ்ரீ. யூ. கிருஷ்ணா ராவ் "சர்வ தேச மார்க்கெட்டிற்கான இந்தியப் படங்கள்" என்பது பற்றிப் பேசினார்,



★ மக்கள் சுகாதாரம்

நமது சர்க்கார் கிராமாந்திர மக்கள் முன்னேற்ற மடைவதில் அக்கரை கொண்டுள்ளது பற்றி சந்தோஷிக்கிறேன். கிராம மக்களும் நாகரீக மடைந்து, கல்வி அறிவு பெற்று வாழ வேண்டும் என்பதே என் அவாவும். இதற்காக சர்க்கார் சினிமாக்களை அங்கு அதிகமாக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்களாம்.

சர்க்கார் கிராமாந்திரங்களில் அதிகமாகச் சினிமாக்களை ஏற்படுத்துவதற்கு முன், இப்பொழுது அடிக்கடி வந்து போகும் டூரிங் சினிமாக்கள் கிராமாந்தரங்களில் வரும் சமயம் ஏற்படும் சுகாதாரக் கேட்டைப் போக்க முயற்சிக்க வேண்டும். டூரிங் சினிமாக்கள் அநேகமாக கிராமங்களின் மத்தியில்தான் முகாம் போடுகின்றன. அது வரும் சமயம் மலஜலம் கழிப்பதற்காக என்று ஒரு மூங்கல் தட்டியை ஒரு புறமாக வைத்து அங்கு அவைகளைச் செய்யும்படி கூறுகின்றனர். ஆனால் மலஜலம் போன இடம் அப்படியே சுத்தம் செய்யப்படாமல் இருக்கிறது. கிராமத்தின் மய்யமாக உள்ள இடத்தில் இப்படி அசுத்தம் செய்யப்படுவதால் கிராம மக்களின் சுகாதாரம் பாதக மடைகிறது. மக்கள் சுகாதாரமாக வாழ்ந்தால்தான் மற்ற நாகரீக முன்னேற்றம், கல்வி ஞானம் எல்லாம். ஆகையால் சர்க்கார் சினிமாக்களை அதிகமாக ஏற்படுத்துவதற்குமுன் இம்மாதிரி சுகாதாரத்தைக் கெடுக்கும் செய்கைகளைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கே. எம். மொய்தீன்,

கல்லிடைக்குறிச்சி.

கால வித்தியாசம்

சினிமாப் படங்களில், அரச குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தால் அப்பிள்ளையை ராணியுடனிருந்து தாலாட்டும் தாதிமார்களும், ராணியின் தோழிகளும், குழந்தை பேபியானதும் பேபி குமாரியானதும், குமாரி காதலரைத் தேடும் பருவம் வந்த பொழுதும் ராணியின் தாதிகளும், தோழிகளும் தாங்கள் ராணியுடன் முன் எவ்வித மிருந்தார்களோ அவ்விதமே காதல் பருவமடைந்த குழந்தையின் தோழியாக படத்தில் காணப்படுகிறார்கள். பட முதலாளிகளாவது டைரெக்டர்களாவது ராணிக்குக் குழந்தை பிறந்தவுடன் அவளுடன் அப்பொழுது இருக்கும் தாதிமார்களுக்கு வேறு உப நடிகைகளையும், குழந்தை பருவமடைந்தவுடன் வேறு உப நடிகைகளையும் சேர்க்கக் கூடாது? அநேக படங்களில் இவ்வித மிருக்கின்றன.

இதெல்லாம் அலட்சியத்தினால் ஏற்படுகிறது. நாம் எது செய்தாலும் பொது ஜனங்கள் கேட்க மாட்டார்கள் என்ற எண்ணத்தினால் என்றும் நினைக்கிறேன். இல்லையென்றால் ஏன் இப்படிச் செய்யப் போகிறார்கள்?

இனிமேலாவது பட முதலாளிகள் இதைக் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

கே. எம். பீர்மஸ்தான்,

மதுரை.

ஒரே கொள்கை அவசியம்

சமீபத்தில் இந்திய சர்க்கார் சினிமாப் படங்களின் தரத்தைப் பற்றி பார்லிமெண்டில் நிறைவேற்றிய தீர்மானம் வரவேற்க வேண்டியது. இம்மாதிரி சட்டங்களுக்கு ஜனங்களின் அமோக ஆதரவு கட்டாயம் இருந்தேதீரும்.

சர்க்கார் இப்போது கொண்டு வந்திருக்கும் சட்டம் இந்தியப் படங்களுக்கு மட்டுமா அல்லது வெளி நாட்டுப் படங்களுக்கும் உண்டா என்று தெரியவில்லை. இந்த சந்தேகம் வந்ததற்குக் காரணம்

படங்களில் ஆபாசக் காட்சிகள் வரக் கூடாது என்று கூறும் சர்க்கார், வெளி நாட்டுப் படங்களில் மிகக் கேவலமான காட்சிகளையும் அனுமதித்திருப்பதே ஆகும். இப்படி வெளி நாட்டுப் படங்களுக்கு ஒரு சட்டம், இந்தியப் படங்களுக்கு ஒரு சட்டம் என்றால் இதில் அர்த்தமே இல்லை. எந்த வகைக் காட்சி இந்தியப் படங்களில் தடை செய்யப்படுகிறதோ, அதையே வெளி நாட்டுப் படங்களிலும் தடை செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் சட்டத்தை மாத்திரம் இயற்றிக் கொண்டே போவதில் அர்த்தமே கிடையாது. இந்திய சர்க்கார் இவ் விஷயத்தைக் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ந. சுந்தரமூர்த்தி,

பூவாளூர்.

அவசரத் தீர்ப்பு

ஏப்ரல் மாத ஊசியில் 'அனைத்தையும் தடை செய்யுங்கள்' என்ற தலைப்பின் கீழ் நண்பர் கூறியுள்ளதைப் பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும். நண்பர் கூறிய படத்தில் வரும் காட்சி இயற்கையானது என்று கூறுகிறேன்.

ஒரு காரியத்தை எண்ணி ஒருவன் ஒன்றின் மீது நம்பிக்கை வைக்கிறான். அதற்காக அவன் தன்னிடம் இருப்பதையெல்லாம் செலவழிக்கிறான். அப்பொழுதும் அவனுக்கு நேர்மாறாகக் காரியம் நடந்தால் அவன் மனம் எந்த நிலையில் இருக்கும்? மனம் கலங்கிய சமயத்தில் மனிதன் தன் நிலையையும் இழப்பான். அச்சமயம் அவன் செய்வது இன்னது என்றே அவனுக்குத் தோன்றாது. அந்த நிலையில் அவன் செய்வது தவறு, அது கடவுளை நிந்திப்பது போன்றது என்று கூறுவது தவறு. எதையும் இயற்கையாக உள்ளதையும், நேரில் நடப்பவையுமே நாம் மேற்கொள்ள வேண்டும். அதை விடுத்து 'இது தப்பு', 'அது தப்பு' என்று சொல்லிக் கொண்டு போனால் நாம படங்களை நடைமுறையில் உள்ளது போல் சித்தரிக்க முடியாது. இயற்கைக்கு விரோதமாகவே தான் செய்யவேண்டிவரும். இவ்விஷயத்தில் நண்பர் அவசரப்பட்டுத் தீர்ப்புக் கூறி விட்டார். அவரே திரும்பவும் சிந்தித்தால் இது நன்கு விளங்கும்.

கு. வி. பாலசுந்தரம்,

சென்னை.

அர்த்தமற்ற பிரசாரம்

சமீபத்தில் வெளி வந்த ஒரு சமூகப் படத்தைப்பற்றி ஒரு சாரார் 'அம்மாமி பாஷைக்கும், அர்த்தமற்ற தத்துவங்களுக்கும் சாவு மணி' என்று கூறுகின்றனர். முதலில் இவர்கள் எதை அம்மாமி பாஷை என்று குறிப்பிடுகிறார்கள் என்றே தெரியவில்லை. அப்படிக் கூட ஒரு பாஷை இருக்கிறதா? அதே சமயத்தில் அந்தப் படத்தில் வரும் சில வசனங்கள் இவர்கள் கூற்றுக்கு நேர் மாறாக இருக்கிறது. இவர்கள் சொல்படி 'கிரகசாரம்' என்பது என்ன பாஷை? இதை எந்த வகையில் சேர்ப்பது?

தத்துவம் என்பதைப் பற்றி நான் பேசத் தயாராக இல்லை. ஆனால் இவர்கள் கூறும் அர்த்தமற்ற தத்துவம் என்பதுதான் எனக்கு விளங்காத வஸ்துவாகும். தத்துவங்களை நம்பாதவர்கள் 'அதிர்ஷ்டம்' என்பதை எப்படி நம்புகிறார்கள்?

படத்தில் வரும் ஒரு வேலைக்காரப் பெண்ணைப் பற்றிச் சொல்லப்படும் வசனம் இருக்கிறதே அது நம் தலையை குனிய வைக்கிறது. பணிப் பெண்களைக் கேவலமாகப் பேசும் இந்த வசனம் மிகவும் கீழ்த்தரமாக இருக்கிறது. இவ்வளவுதான் என்பதில்லை. இன்னும் எத்தனையோ ஓட்டைகள் இப்படத்தில் இருக்கின்றன. பல வெற்றி பெற்ற படங்களின் முக்கிய காக்ஷிகள் தத்தெடுக்கப் பட்டிருக்கின்றன. இவ்வளவு நல்ல அம்சங்கள் நிறைந்த படத்தைப் பற்றி இன்னும் என்ன எழுத இருக்கிறது?

ரா. சுப்பையா,

பாளையங்கோட்டை.

புராணப்படம்

ஒரு சிலரை மகிழ்விக்கும் நோக்கத்துடன் புதிய கொள்கையில் அர்த்தமற்ற முறையில் பட முதலாளிகள் தற்காலத்தில் அளித்துவரும் படங்கள் சமூகப் படங்களாகும். சமூகப் படம் என்ற எண்ணத்தில் எதையும் எப்படியும் பிடிக்கலாம் என நினைக்கிறார்கள் பட முதலாளிகள். மேலும் ஒரே மாதிரியான சமூகப் படங்களே பிடிக்கப்பட்டு வருவதினால், அவைகளைப் பார்க்கும் ரஸிகர்களுக்கு வெறுப்புத்தான் ஏற்படுகிறது.

நல்ல நீதிகளை புகட்டக்கூடியப் படங்கள் சமூகப் படங்களானால் என்ன? புராணப் படங்களானால் என்ன? ஆனால் பொது ஜனங்களில் பெரும்பாலோர் படிப்பு வாசனை அற்றவர்களே அதிகம். அங்ஙனம் இருக்க அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளவும், அவர்களுக்கு நன்கு தெரிந்ததுமான கதைகள் புரா

ணங்கள்தான். எனவே புராணப் படங்கள் மேலும், மேலும் பிடிக்கப்படுவதால் யாதொரு குற்றமும் ஆகாது. ஆனால் அவைகளை நல்ல முறையில் படமாக்க வேண்டும் என்பதே என் விருப்பம்.

எம். தங்கவேலு,
மேட்டுப்பாளையம்.

'காப்பி' மோகம்

இத்தனை நாட்கள் வரை தமிழ்ப் படங்களில் பாட்டுகளின் மெட்டுகளைத் தான் காப்பியடித்து வந்தனர். இப்பொழுதோ ஆடை, சிகை அலங்காரம், பழக்க வழக்கங்கள் —எல்லாவற்றையுமே வடநாட்டை மட்டுமல்ல, மேல் நாட்டையும் காப்பியடிக்கத் தலைப்பட்டு விட்டார்கள். இவர்கள் செய்கையால் நம் நாட்டு பழக்க வழக்கங்களும் கலாசாரமும் நசித்துவிடும். அதைப் பாதுகாக்க வேண்டுமானால் பட முதலாளிகள் தாங்கள் தயாரிக்கும் படங்களில் நம் நாட்டு நாகரிகத்தையும், கலாசாரத்தையும் நன்கு சித்தரிக்க வேண்டும். இதை விடுத்து தங்கள்பாணியிலேயே போவார்களேயானால் நாட்டிற்கும், அதன் கலாசாரத்திற்கும் துரோகம் செய்தவர்களாவார்கள். இப்பழிச் சொல்லுக்கு நம் பட முதலாளிகள் இடம் கொடுக்க விரும்பார்கள் என்று நம்புகிறேன்.

எஸ்.கே.எஸ். அகமது முஸ்தாபா,
பூனா.

*பரிசு பெற்ற கடிதம்

★

எழுதியவர்:
கே. எம். மொய்தீன்,
கல்லிடைக்குறிச்சி.

சர்க்கார் கவனிக்குமா?

தியேட்டர்களில் புகை பிடிக்கக் கூடாது என்று சமீபத்தில் சர்க்கார் ஒரு சட்டம் கொண்டு வந்தது பொது ஜனங்களுக்கு நன்மையே ஆகும். ஆனால் இதைச் சரியாக நிர்வகிக்க வேண்டும்.

தற்பொழுது சர்க்கார் இயற்றிய சட்டத்தின்படி தியேட்டர் வாசலிலும், தியேட்டரினுள்ளும், புகை பிடிக்காதே என்ற அட்டை தொங்குகிறது. படம் ஆரம்பிப்பதற்கு முன்னும், மத்தியிலும் 'புகை பிடிக்காதே' என்ற வாக்கியங்களும் காட்டப்படுகின்றன. இவைகளால் நல்ல பலன் கிடைக்கவே இல்லை. மேலும் இவைகள் படிக்கத் தெரிந்தவர்களுக்கே அல்லாமல் படிப்பறிவற்றவர்களுக்கல்ல. அவர்கள் படிக்கத் தெரியாத காரணத்தால் தங்கள் போக்கிலேயே இருக்கின்றனர். யாராவது அவர்களிடம் சொல்லப்போனால் சண்டைக்கு வந்து விடுகின்றனர். இவ்வித சச்சரவைப் போக்க தியேட்டர் முதலாளிபுகை பிடிக்காதே என்பதை ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பதுடன், சர்க்காரும் போலீஸ்காரரை தியேட்டர்களினுள் சென்று யாரும் புகை பிடிக்காமல் கண்காணிக்குமாறும் சட்டளை பிறப்பிக்க வேண்டும். அப்படிச் செய்யா விட்டால் இச்சட்டம் இயற்றப்பட்டும் ஒன்றுதான். இல்லாமலும் ஒன்றுதான் என்ற நிலை ஏற்படும்.

ஜி. கிருஷ்ண மூர்த்தி.
கும்பகோணம்.

சிறுவர்களுக்குப் படம்

நம் பட முதலாளிகள் "அப்பாவும் அண்ணாவும்" பார்க்கக்கூடிய படங்களையே தயாரிக்கிறார்கள். ஆனால் என்போன்ற சிறுவர்கள்பார்க்கக்கூடிய படங்களை தயாரிப்பதில்லை. நம் பட முதலாளிகள் பணத்தை பெரிதாக நினைத்து எடுக்கும் படங்களால் சிறுவர்களுக்கு நல்லதற்குப் பதில் கெடுதலே ஏற்படுகிறது. இதை நம் அரசாங்கத்தாரும் கவனிப்பதில்லை. சிறுவர்கள் முன்னேற்ற மடையவும் பிற்காலத்தில் சிறந்து விளங்குவதற்கு ஏதுவாகவுமுள்ள படங்களை தயாரிக்க பட முதலாளிகள் முன்வர வேண்டும். அப்பொழுதுதான் சிறுவர்கள் எதிர்காலத்தில் நல்ல முறையில் வாழ்க்கையை நடத்த முடியும்.

எம். கோவிந்தராஜ்,
உறையூர்.

கே. சுப்ரமண்யம் ராஜினாமா

தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையின் தலைவர் டைரெக்டர் ஸ்ரீ. கே. சுப்ரமண்யம் அபிப்பிராய வேற்றுமை காரணமாக தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டதாகத் தெரிகிறது.

லலிதா - பத்மினி

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

இரண்டு ஜாபிதாக்களையும் கவனிக்கும் போது, லலிதா-பத்மினி நடனத்தை ரஸிகர்கள் ரொம்பவும் விரும்புகிறார்கள் என்பது தெரியவரும்.

தற்போது ஒரு படத்திற்கு வெற்றி அளிக்கும் முக்கிய அம்சங்களில் ஒன்றாக அவர்களது நடனம் விளங்குகிறது. ஆதலால்தான் நம் பட முதலாளிகள் போட்டி போட்டுக்கொண்டு அவர்களது நடனங்களைச் சேர்த்து வருகிறார்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

இவ்வளவு படங்களில் அவர்கள் நடனம் ஆடியிருந்த போதிலும் ரஸிகர்கள் சலிக்காமல் மேலும் பார்க்க விரும்புகின்றனர். காரணம், அவர்கள் ஒவ்வொரு படத்திற்காகவும் ஒவ்வொரு நூதன நடனத்தைப் பழக்கிக்கொண்டு, அதை மிக அழகாகவும் ஆடி வருவதுதான்.

லலிதா-பத்மினி நடனத்தில் சிறுவர் முதல் வயோதிகர் வரை அனைவருக்கும் அசாதாரணமான மோஹம் இருந்து வருகிறது. இது சம்பந்தமாக சில தினங்களுக்கு முன் நிகழ்ந்த ஒரு ஆச்சரியத்தை அவர்கள் கூறினார்கள்.

சென்னையில் ஒரு தனவந்தரின் பிள்ளைக்கு யக்ஞோபவிதாரணம் செய்து வைக்க ஏற்பாடாயிற்று. அந்தச் சிறு பையனுக்கு லலிதா-பத்மினி நடனத்தில் அசாத்திய மோஹம். ஆகவே, அவன், அவர்களது நடனத்திற்கு ஏற்பாடு செய்யாவிட்டால்தான் பூணூல் போட்டுக் கொள்ள முடியாது என்று சொல்லி விட்டானாம். பையனுடைய தகப்பனார் வந்து, இவர்களிடம் பரிதாபமாக இதைத் தெரிவித்தாராம். இவர்கள் ஆட ஒப்புக் கொள்ளாமல் வேறு என்ன செய்ய முடியும்!

நடனக்கலை மீதுள்ள பேரார்வம்

தம் ஏழாவது வயதில் லலிதாவும், பத்மினியும் முதன் முதலாய் அரங்கேறியபோது எடுக்கப்பட்ட படம் இது.

காரணமாகவே லலிதா—பத்மினி சகோதரிகள் இத்துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் கண்யமும் செல்வமும் மிகுந்த ஒரு நாயர் குடும்பத்தில் பிறந்தவர்கள். அவரது உறவினர்களில் பலர் பெரிய பெரிய சர்க்கார் அதிகாரிகளாக இருந்து வருகின்றனர். அவரது சின்னம்மா (மிஸஸ் தம்பிரான்) தற்போதைய திருவாங்கூர் மஹாராஜாவின் மூத்த மாப்ளே மணந்து கொண்டிருக்கிறார். அவர்களது ஒன்றுவிட்ட சகோதரரான பி. கே. ரவிந்திரனுக்கு மலேயாவில் சில எஸ்டேட்டுகள் உள்ளன. இந்த சகோதரிகள் அவைகளைப் பார்ப்பதற்காக மலேயாவுக்கு ஒரு முறை சென்றுவிட்டு வந்திருக்கின்றனர்.

லலிதா 1932-ம் வருஷம் ஜனவரி மாதம் 5-ந் தேதியும், பத்மினி 1933-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 2 -ந் தேதியும் பிறந்தவர்கள். இருவரும் மூன்றாவது பாரம் வரைப் படித்திருக்கின்றனர். தங்கை ராகிணி இன்னும் படித்துக் கொண்டிருக்கிறாள். ஸான்தோம் கான்வென்ட் ஸ்கூலில் ஐந்தாவது ஸ்டாண்டர்டில் அவளைக் காணலாம்.

தங்கை ராகிணி

மாமன் எஸ். பீ. என். நாயரும் அவரது மனைவியும்

லலிதா—பத்மினி இருவருக்கும் தாய் பாஷையான மலையாளம் தவிர, தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய பாஷைகளும் தெரியும். மரம் ஏறுவதற்கும், சைக்கிள் விடுவதற்கும்கூட அவர்களுக்குத் தெரியுமாம். மோட்டார் ஓட்டுவதற்குப் பழகிக் கொள்ளுகிறார்களாம். ஆனால் மலையாளத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தும் அவர்களுக்கு நீந்தத் தெரியாது என்பதைக் கேட்டதும் ஆச்சரியம் அடைந்தேன்.

லலிதாவை அவரது சின்னம்மா தத்தெடுத்துக் கொண்டிருக்கிறார். லலிதா பாடங்களை அக்கறையுடன் படிப்பாராம். அதோடு மிக சாதுவான குணமுடையவராம். ஆனால், பத்மினியோ துறு துறுப்பும், [குறும்புத் தனங்களும் மிகுந்தவராம். இவ்விருவருக்கும் பாடக் கற்றுக்



தமையன் ரவீந்திரன்

தாயார் சரஸ்வதி அம்மாள்

கொள்ள வேண்டுமென்று அவா அதிகமுண்டு. ஆகவே அவர்கள் வாய்ப்பாட்டு, வீணை இவ்விரண்டிலும் இப்பொழுது சிக்ஷை பெற்று வருகின்றனர்.

நல்ல முகவெட்டிருப்பதாலும், முக பாவங்களை நன்கு வெளியிடுவதாலும் அவர்களுக்கு பாத்திரங்களைக் கொடுத்து நடிக்கச் செய்ய வேண்டுமென்று பட முதலாளிகள் ஆசைப் படுகின்றனர். பாரதி என்ற கன்னடப் படத்தில் சகோதரிகள் மூவருமே சிறு சிறு பாகங்களேற்று நடித்திருக்கின்றனர். பத்மினி கோகுலதாஸியில் கிருஷ்ணனாக நடித்திருக்கிறார். இன்னும் சில படங்களில் அவர்களுக்கு சிறு பாத்திரங்களும், சொற்ப சம்பாஷணைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் தற்போதைக்கு படங்களில் நடனம் ஆட மட்டுமே விரும்புகின்றனர்.

லலிதா–பத்மினி அகராதியில் 'சோம்பல்', 'ஓய்வு'—இந்தப் பதங்களுக்கெல்லாம் இடமேயில்லை. மேடையில் ஆடுவது, படத்தில் ஆடுவது, இவற்றிற்காக ஒத்திகை பார்ப்பது, ரயில் பிரயாணம் செய்வது இப்படியாக அவர்களது காலம் கழிகிறது. அப்படியிருக்க அவர்களுக்குக் கலியாணத்தைப் பற்றி நினைக்கக்கூட எங்கே அவகாசம்!

(தொடர்ச்சி 61-ம் பக்கம்)

'கன்னிகா' ஷூட்டிங்கின்போது எடுத்த படம்

பாக்யா பிக்சர்ஸ்

தயாரிப்பு

டைரெக்ஷன்

ஜித்தன் பெனர்ஜி

ஸ்டுடியோ

நியூடோன்

நடிகர்கள்:

பி. யு. சின்னப்பா

கண்ணாம்பா

அஞ்சலி தேவி

என். எஸ். கிருஷ்ணன்

லலிதா

பத்மினி

முதலியோர்

சின்னப்பா பாட்டன், மகன் பேரன் ஆகிய மூன்று வேஷங்களில் தோன்றி நடிக்கின்றார்

★

மங்கையர்க்கரசி

திரைக் கதை

மதுராபுரி பட்டினமே அன்று தேவ லோகம் போலிருந்தது. அரசன் முதல் ஊர் ஜனங்கள் வரை எல்லோரும் குதூகலமாக இருக்கின்றனர். பதர கீதம் பாடி மகிழ்கின்றனர். மன்னனும் மனம் பூரிக்கிறான்.

இளவரசன் காந்தரூபனும், இளவரசி மங்கையர்க்கரசியும் பிரஜை

சின்னப்பாவும், அஞ்சலிதேவியும்

கண்ணாம்பா

களுக்கு பரிசுகள் வழங்குகின்றனர். அச் சமயம் காந்தருபனுடைய நண்பனும் கவியுமான வித்யாபதி அங்கு வருகிறான். கவியை மங்கையர்க்கரசிக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறான் காந்தருபன். ஓய்வான நேரங்களில் அரண்மனைக்கு வந்து போகும்படி இளவரசனும், இளவரசியும் அவனைக் கேட்டுக் கொள்கின்றனர்.

பரிசுகள் வழங்கிய பிறகு மங்கையர்க்கரசியும், காந்தருபனும் உல்லாசமாக நந்தவனத்திற்குச் செல்கின்றனர். அங்கு வண்டுகளின் ரீங்காரமும், தென்றல் காற்றும் அவர்களைப் பரவசப்படுத்துகிறது. இருவரும் உல்லாசமாக சல்லாபம் செய்கின்றனர். அப்பொழுது காந்தருபனுக்கு மங்கையர்க்கரசியின் நாட்டியத்தைக் காண வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. அதை அவளிடம் சொன்னதும் அவள் நாட்டியமாடத் தேவையான உடைகளை அணிந்து வர அரண்மனையின் உள்ளே செல்கிறாள். காந்தருபன் தனிமையில் பளிங்கு மண்டபத்தில் வீற்றிருக்கிறான்.

அச் சமயம் வான வீதியில் உல்லாசமாகச் சென்று கொண்டிருந்த கந்தர்வ கன்னிகைகளின் தலைவி சசிகலா காந்தருபனைக் காண்கிறாள். காந்தருபனின் வசீகரம் நிறைந்த முகம் அவளை மயக்குகிறது. உடனே மேக மண்டலத்திலிருந்து நந்தவனத்தில் இறங்குகிறாள். தன் ஆவலை காந்தருபனிடம் தெரிவிக்கிறாள். காந்தருபன் அவளை வெறுக்கிறான்.

தாத்தா கிருஷ்ணனும், பாட்டி மதுரமும்

அவள் எவ்வளவு கெஞ்சியும் காந்த ரூபன் அவளை வெறுத்ததால் அவனை மந்திர சக்தியால் மலர் மாலையாக மாற்றி கழுத்தில் அணிந்து கொண்டு மேக மண்டலத்திற்குச் சென்றுவிடுகிறாள்.

நாட்டியமாட உடை அணிந்து வரச் சென்ற மங்கையர்க்கரசி தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு புன் முறுவலுடன் நந்தவனத்திற்குத் தன் காதலனைத் தேடி வருகிறாள். நந்தவனத்தில் காந்தரூபன் வீற்றிருந்த பளிங்கு மண்டபத்தை

© முகில்

அடைந்து அங்கு பார்க்கிறாள். இல்லை. பிறகு நந்தவனத்தின் மூலைமுடுக்குகளையெல்லாம் தேடுகிறாள். எங்கும் அவன் இல்லாது கண்டு பீதி கொண்டு, தன் தோழிகளையும், மற்றும் பணியாட்களையும் கேட்கிறாள். யாவரும் 'காந்தரூபன் போன இடம் தெரியாது' என்று கூறியதைக் கேட்டு மங்கையர்க்கரசி மனம் புழுங்குகிறாள். காதலன் மாயமாக மறைந்த செய்தியைத் தாங்கிக் கொண்டு அரண்மனைக்கு ஓடுகிறாள் மங்கையர்க்கரசி.

மகன் மாயமாய்க் காணாமல்போன செய்தி கேட்டு மன்னன் மதுராங்கதன் துயரத்தில் மூழ்குகிறான். ராணி வசந்தாவதியும் சோகத்தில் ஆழ்கிறாள். காந்தரூபனைக் கண்டு பிடிக்க மன்னன் தன் சேனைகள் பூராவையும் எட்டு திக்குகளுக்கும் அனுப்புகிறான்.

மங்கையர்க்கரசி தன் காதலனைக் காணாத துக்கத்தால் அந்தப்புரத்தில் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருக்கிறாள். அவளைக் காண அப்பொழுது கவி வித்யாபதி வருகிறான். விஷயத்தை அறிந்து அவனும் துயரத்தில் ஆழ்கிறான். பிறகு மங்கையர்க்கரசிக்கு ஆறுதல் கூறி சுக்ரவார விரதத்தை அனுஷ்டிக்கும்படிச் சொல்லிச் செல்கிறான்.

கந்தர்வ லோகத்தை அடைந்த சசிகலா காந்தரூபனை மாலையிலிருந்து பழைய உருவத்திற்கு மாற்றி, தன்னை

கரசியும் காந்தரூபனும் கிடைத்த கொஞ்ச நேரத்தை இன்பமாகக் கழிக்கின்றனர். அவர்கள் தாங்கள் ஒன்று சேர்ந்த சந்தோஷத்தைப் பூரணமாக அனுபவிப்பதற்குள் பிரிக்கப்படுகின்றனர். மங்கையர்க்கரசி திரும்பவும் பூலோகத்திற்கு அனுப்பப்படுகிறாள். பிறகு சசிகலா காந்தரூபனை அடைகிறாள். சில நாட்கள் செல்கின்றன. மங்

.முகிலை.

அங்கீகரிக்கும்படி வேண்டுகிறாள். காந்தரூபன் சம்மதிக்க மறுக்கிறான். சசிகலா முதலில் கெஞ்சுகிறாள். நயமாகப் பேசுகிறாள். எதுவும் பயனில்லாது, முன்போலவே காந்தரூபன் இருப்பதைக் கண்டு கோபம் கொண்டு அவனைத் தன் மந்திர சக்தியால் 'அப்படிச் செய்வேன், இப்படிச் செய்வேன்' என்று பயமுறுத்துகிறாள். தன் காதலி மங்கையர்க்கரசியை ஒரு முறை பார்த்துவிட்டால் பிறகு அவள் இச்சைக்கு உட்படுவதாகக் கூறுகிறான். தான் சொன்னபடியே நடப்பதாகச் சத்தியமும் செய்து கொடுக்கிறான்.

சிறிது நேரத்திற்குள் மங்கையர்க்கரசி கந்தர்வ லோகத்திற்குக் கொண்டுவரப் படுகிறாள். காந்தரூபனையும் அவளையும் தனியே விட்டு வைக்கிறாள் சசிகலா. மங்கையர்க்கரசி தன் கணவன் அகப்படாதது கண்டு மேலும் வருத்தமுறுகிறாள். அவள் கந்தர்வ லோகத்தில் காந்தரூபனைக் கண்டதைக் கனவென்றே கருதுகிறாள். ஆனால் அவள் கர்ப்பம் தரித்திருப்பதை எண்ணி அஞ்சுகிறாள். கணவன் இல்லாத காலத்தில் கர்ப்பம் தரித்திருப்பதால் உலகம் தன்னைப் பற்றி என்ன நினைக்குமோ என்று வருந்துகிறாள்.

ஒரு சமயம் மங்கையர்க்கரசி மனம் புழுங்கி, தேவி சிலையின் முன்,

தான் கணவன் இல்லாத சமயம் கர்ப்பம் தரித்திருப்பதை வாய் விட்டுச் சொல்லிக் கதறுகிறாள். அச் சமயம் அங்கு தற்செயலாக வந்த மன்னன் மதுராங்கதன் அதைக் கேட்டு மருமகள்மீது சந்தேகம் கொள்கிறான். தோழிகளை அழைத்து அந்தப்புரத்திற்கு யாராவது ஆண் வருகிறானா என்று விசாரிக்கிறான். கவி வித்யாபதி அடிக்கடி அங்கு வந்து போவதைத் தோழிகள் கூறுகின்றனர். மன்னன் கவியின்மீது சந்தேகம் கொள்கிறான்.

ஒரு நாள் கவி வித்யாபதி மங்கையர்க்கரசியைக் காண அந்தப்புரத்திற்கு வருகிறான். மங்கையர்க்கரசியும் அவனை வரவேற்றுத் தன் துயரங்களைக் கூறுகிறாள். கவிக்கும் இளவரசிக்கும் பேச்சு நடந்து கொண்டிருக்கும் சமயம் அரசன் அங்கு வந்து விடுகிறான். முன்பின் யோசியாது தன் மருமகளை விபசாரி யென்றும், கவியை கள்ளக் காதலன் என்றும் கூறி, கவியைக் காராக்கிரகத்தில் அடைக்கும்படியும், மங்கையர்க்கரசியை கானகத்திற்கு எடுத்துச் சென்று சிரச்சேதம் செய்து விடும்படியும் ஆட்களுக்குக் கட்டளை இடுகிறான்.

மங்கையர்க்கரசியைக் கொல்ல வனத்திற்குக் கொலையாளிகள் அழைத்துச் செல்கின்றனர். நடுக்காட்டில் மங்கையர்க்கரசியைச் சிரச்சேதம் செய்ய கொலையாளிகள் அவளை நிறுத்தி வாளை உயரத் தூக்குகின்றனர். அச்சமயம் ஒரு மின்னல் தோன்றுகிறது. கொலையாளிகள் கையில் பிடித்திருந்த வாள் மாயமாகத் தரையில் விழுகிறது. இது கண்ட கொலையாளிகள் பயந்து மங்கையர்க்கரசியைக் கொல்லாது ஓட்டம் பிடிக்கின்றனர். அச்சமயம் மங்கையர்க்கரசி பூர்ண கர்ப்பிணியாதலால் அங்கேயே பிரசவித்தும் விடுகிறாள். அப்பொழுது அவ்வழியே சென்று கொண்டிருந்த காட்டு மனிதன் ஒருவன் அவளைக் காப்பாற்றித் தன் குடிசைக்கு அழைத்துச் செல்கிறான். சில நாட்கள் செல்கின்றன. ஒரு நாள் காட்டிலுள்ள பத்ரகாளி கோவிலில் பூஜை நடக்கிறது. பூஜையின் நடுவே பூஜாரிக்கு ஆவேசம் வந்து காளிக்குக் குழந்தை பலி வேண்டுமென்கிறான். அங்கு கூடியிருந்த காட்டு முரடர்களில் ஒருவன் மெள்ளச் சென்று மங்கையர்க்கரசியின் பாலகனை அவளுக்குத் தெரியாமல் எடுத்து வருகிறான்.

அச்சமயம் மதுராபுரி மன்னன் படுத்துறங்குகிறான். காளிதேவி அவன் கனவில் தோன்றி தன் கோவிலில் நடக்கும் சிசு பலியை நிறுத்திக் குழந்தையை எடுத்து வந்து வளர்க்கும்படி கூறுகிறாள். மன்னன் கண்விழித்து காளியின் கட்டளைப்படி தன் சேனைகளை அழைத்துக் கொண்டு காட்டிலிருக்கும் காளி கோயிலுக்கு வருகிறான். பலியிடப் போகும் சமயம் அங்கு வந்து குழந்தையைக் காத்து எடுத்துச் செல்கிறான். அரண்மனைக்கு வந்த பிறகு அக் குழந்தைக்கு சுதாமன் என்று பெயரிட்டு வளர்க்கிறான்.

குழந்தையைக் காணாத மங்கையர்க்கரசி அடுத்திருந்த நகரத்திற்குப் போகிறாள். அங்கு பசிக் கொடுமையால் பிச்சை யெடுக்கிறாள். ஒரு தெருவழியே பிச்சை யெடுத்துக் கொண்டு போகும் சமயம் வஞ்சி என்ற தாசி மங்கையர்க்கரசியின் அழகைக் கண்டு, அவளிடம் ஆசை வார்த்தை பேசி தன்னுடன் தங்கியிருக்கும்படி கேட்டுக் கொள்கிறாள். மங்கையர்க்கரசியும் அவள் பேச்சில் மயங்கி அதற்குச் சம்மதிக்கிறாள்.

மதுராங்க மன்னனால் வளர்க்கப்பட்டு வந்த சுதாமன் காளைப் பருவம் எய்துகிறான். இளவரசனாகவும் பட்டம் சூட்டப்படுகிறான். அதன் பிறகு பிரஜைகளின் நலத்துக்காக சுதாமன் தன் தோழனுடன் இரவு நேரங்களில் நகர் சோதனைக்கு வருகிறான். ஒரு சமயம் அப்படிச் சோதனை செய்து கொண்டு வரும் போது தாசி வஞ்சி

யின் வீட்டில் இருக்கும் மங்கையர்க்கரசியைக் காணும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. மங்கையர்க்கரசியின் அழகைக் கண்டு அவன் மோகிக்கிறான்.

தாசி வஞ்சி மங்கையர்க்கரசியைத் தன் தொழிலில் ஈடுபடும்படி பலமுறை கூறியிருக்கிறாள். அதை மங்கையர்க்கரசியும் பலமுறை எதிர்த்திருக்கிறாள். ஆனாலும் சுதாமனின் தோழன் வந்து சொன்ன பிறகு தாசி வஞ்சியால் சும்மா இருக்க முடியவில்லை. அதன் காரணமாக அவள் மங்கையர்க்கரசியை சுதாமனுக்கு இணங்கும்படி கட்டளையிடுகிறாள்.

அன்றிரவு மங்கையர்க்கரசியைப் பலவந்தமாக அலங்காரம் செய்து, நன்கு சிங்காரிக்கப்பட்ட அறையில் கொண்டு விடுகிறாள். அங்கு தயாராக வந்து காத்திருந்த சுதாமன் அவள் அழகைக் கண்டு, அவளை அணைக்க ஓடிவருகிறான். மங்கையர்க்கரசி அவனைத் தடுத்து நீதி போதிக்கிறாள். மோகத்தினால் கண் மறைக்கப்பட்ட சுதாமன் அவைகளைக் கேளாமல் அவளை நெருங்குகிறான். அச்சமயம் மங்கையர்க்கரசியின் மார்பிலிருந்து பால் சுரந்து அவன் முகத்தின் மீது தெளிக்கிறது. சுதாமன் அச்சத்தால் அதிர்ச்சியுற்று, எதுவும் பேசாமல் பின் பக்கத்து வழியாக வெளியேறுகிறான்.

அரண்மனை வந்து சேர்ந்த சுதாமன் பஞ்சணையில் படுத்து உறங்குகிறான். திடீரென்று விசித்திரமான கனவு கண்டு கண் விழிக்கிறான். அவன் எதிரே இருந்த மங்கையர்க்கரசியின் படத்தைக் கண்டு திகைக்கிறான். அது பற்றி மந்திரியை விசாரிக்கிறான். படத்தில் இருப்பவள் அந்நாட்டு இளவரசியாக இருந்த மங்கையர்க்கரசி என்றும், நடத்தை தவறியதன் காரணமாக காட்டிற்கு அழைத்துச் சென்று அவளை வெட்டிவிட்டனர் என்றும் மந்திரி கூறுகிறான். மந்திரி கூறியதைக் கேட்டு சுதாமன் நகைத்து, மங்கையர்க்கரசி தாசி வஞ்சியின் வீட்டில் இருப்பதாகவும். உடனே தாசி வஞ்சி வீட்டிற்கு ஆட்களை அனுப்பி அங்கு இருப்பவர் அனைவரையும் கைது செய்து வரும்படியும் மந்திரிக்குக் கட்டளையிடுகிறான்.

மறுநாள் நீதி மன்றத்தில் தாசி வஞ்சியின் விசாரணை நடக்கிறது. அப்பொழுது சுதாமனுக்கு நீதி போதித்த, தன் கற்பிற்காக மன்றாடிய ஸ்திரீதான் அந்த நாட்டின் இளவரசி மங்கையர்க்கரசியென்றும் தெரிகிறது. அதே சமயம் அங்கு தோன்றிய காந்தரூபன், சசிகலா இருவர் மூலம் நடந்தவற்றை அறிந்து, அரசன் முதல் அனைவரும் மங்கையர்க்கரசியின் கற்பின்மீது கொண்ட சந்தேகத்தைவிட்டு அவள் பதிவிரதை என்று ஒப்புக் கொள்கின்றனர்.

லலிதா - பத்மினி

[55-ம் பக்கத் தொடர்ச்சி]

நம் இலங்கை ரசிகர்கள் இருக்கிறார்களே; அவர்கள் லலிதா–பத்மினி நடனத்தை நேரில் பார்க்க வேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறார்களாம். ஆகவே இன்னும் சில மாதங்களில் அவர்கள் இலங்கைக்குப் போய் வரத் தீர்மானித்திருக்கிறார்களாம்.

இலங்கையில் மட்டிலுமல்ல; இந்தியா பூராவிலுமே பிரயாணம் செய்து நாட்டியம் ஆட வேண்டுமென்பது அவர்களது விருப்பம். அது மட்டுமல்ல அமெரிக்கா சென்று, இந்தக் கலையின் உயர்வை அங்குள்ளோர் அறியும்படிச் செய்ய வேண்டுமென்பது அவர்கள் பேரவா. அவர்களது ஒன்றுவிட்ட சகோதரர்களில் ஒருவர் தற்போது அமெரிக்காவில், "பான் அமெரிக்கன் ஏர்வேஸி"ல் விமான என்ஜினியராக இருப்பதால் அவர்களது பேரவா பூர்த்தியாவதற்கு வசதியும் இருக்கிறது. ஆனால் இந்தப் படத் தொழில் இதற்கெல்லாம் அவர்களுக்குக் கொஞ்சமாவது அவகாசம் அளித்தால்தானே!

வாழ்க்கையோ வாழ்க்கை

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

நான் ஒரு படத்தில் கதாநாயகியாகவே நடித்திருப்பேன்."

"வீண்பெருமை எதற்கு? போனது போகட்டும். இனிமேல் என்ன செய்வது? இன்றைய மாலைக்குள் நடக்க வேண்டியதைச் சொல்."

"என்னத்தைச் சொல்வது? எத்தனையோ பேர் உறுதிமொழி கொடுத்தார்கள். போன வாரம் சங்கரநாராயணன் சொன்னதைப் பார்த்தால், கட்டாயம் அவர் படத்தில் 'சான்ஸ்' கிடைத்திருக்கணும். அந்த டைரக்டரால் தான் அது போய் விட்டது."

"இப்படியே சான்ஸ் வராமல் போய் விட்டால் நாம் என்ன செய்வது? எத்தனை நாளைக்குத்தான் இந்த சினிமாவை நம்பி யிருப்பது?"

"உன்னை யார் நம்பியிருக்கச் சொன்னது? உனக்கு இஷ்டமில்லாவிட்டால் அதைவிட்டு விடேன்" என்றாள் விமலா கடுமையாக.

"என் மேல் எரிந்து விழுகிறாயே! நானா சினிமாவில் நடிக்கிறேன்?"

"உன்னை யாராவது நடிக்கச் சொல்லி யிருந்தால் கட்டாயம் அப்படியே செய்திருப்பாய். என்னவோ அந்த பாக்கியம் உனக்குக் கிடைக்காமல் போய் விட்டது."

"இந்த விபரீதப் பேச்சு இடக்கட்டும், நடக்க வேண்டியதைப் பார்."

"எனக்குத் தெரிந்த மட்டில் ஷண்முகம் அவர்களைப் பார்க்கலாம். அவருடைய விஷயமும் நிச்சயமாகச் சொலல முடியாது. ஒரு வேளை அவர் மனம் இறங்கி ஏதாவது சான்ஸ் கொடுப்பதாக இருந்தால் பணமும் கிடைக்கும்."

"இந்த அவநம்பிக்கைப் பேச்சு வேண்டாம். எங்கு போனால் கட்டாயம் இன்னிக்குப் பணம் கிடைக்கும்?"

"அந்த இடம் தான் எனக்கும் தெரியவில்லை. எல்லோரும் உறுதி மொழி கொடுக்கிறார்கள். ஆனால் சான்ஸ் தான் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் அப்படியிருக்க நான் யாரைக் குறிப்பாகச் சொல்லுவது?"

"பின் இப்பொழுது என்ன தான் செய்வது?"

"நீ ஏதாவது செய் அம்மா; நான் எந்தப் படமுதலாளியிடமும் இனிமேல் வரமாட்டேன். எனக்கும் இந்த சினிமாப் பிழைப்பும் இனிமேல் வேண்டாம்" என்று சலிப்புடன் கூறினாள் விமலா.

"என்னடி இது; திடீரென்று இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாய்? சினிமாவில் நடிக்காவிட்டால் வேறு என்ன செய்யப் போகிறாய்?"

"வேறு என்ன செய்வது? பழைய தொழிலுக்கே போய் விடுவது?"

காமாட்சி அம்மாள் திகைத்தாள், அவள் ஒரு கணம் எதுவும் பேசாமல் இருந்த பிறகு, "போகலாம். கூடாது என்பதில்லை. இத்தனை நாள் நாம் மதிப்பாக இருந்து விட்டு இப்பொழுது அப்படிப் போனால் கேவலம் இல்லையா? கொஞ்சம் யோசித்துப் பார்!"

"யோசித்துப் பார்த்துத்தான் சொல்கிறேன். நானும் இத்தனை நாள்வரை அப்படித்தான் நினைத்திருந்தேன். ஆனால் நாம் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை. அதனால் தான் இந்த முடிவுக்கு வந்தேன்."

"உன் முடிவு இருக்கட்டும். நாம் திரும்பவும் வீட்டு வேலைக்கே போனால் யாராவது மதிப்பார்களா?"

"அவர்கள் யார் நம்மை மதிப்பதற்கு? அப்படி மதிக்காதவர்கள் வேண்டுமானால் நம் கஷ்டத்திற்கு வந்து உதவி செய்யட்டுமே! மதிப்பைக் காப்பாற்றட்டுமே!"

"இதுதான் அம்மா உலகம். இதில் நன்றாய் இருப்பதைப் பார்க்கவும் மாட்டார்கள். கெட்டுப் போனால் கொடுக்கவும் மாட்டார்கள். ஆனால் இவர்கள் என்றைக்கும் ஏதாவது சொல்லிக் கொண்டு மாத்திரம் இருப்பார்கள்."

"இந்தக் கதையெல்லாம் இருக்கட்டும். வீட்டுக்காரி விஷயத்தைப் பற்றி........"

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. பார்வதி அம்மாள் ஊரிலிருந்து வந்திருக்கிறார்களாம். அவர்களுக்கு நம்மீது அலாதி பிரியம். இன்னமும் நாம் அவர்களிடத்தில் வேலை செய்து வந்ததை மறக்காமலிருப்பவர்கள். அவரைப் போய் வேண்டுமானால் கொஞ்சம் பணம் கேட்டுப் பார்க்கிறேன்."

"அவர்களா கொடுக்கப் போகிறார்கள்?" என்று அலட்சியமாகச் சொன்னாள் விமலா.

"அப்படிச் சொல்லாதே விமலா. அந்த அம்மாள் எனக்கு எவ்வளவோ ஒத்

தாசை செய்திருக்கிறார்கள். நானும் அவர்களுக்கு. எவ்வளவோ உழைத்திருக்கிறேன். அந்த நன்றியை அவர் மறக்க மாட்டார். நான் போய் பார்த்துக் கொண்டு வருகிறேன்."

"சரி, அம்மா. உன் நம்பிக்கையையும் நான் கெடுக்க வில்லை. போய் வா."

"நா . வர நேரமாகலாம். நீ சமையலை முடித்து சாப்பிட்டு விடு. எனக்காகக் காத்துக் கொண்டிருக்காதே" என்று கூறி விட்டு காமாட்சி அம்மாள் வேகமாக வெளியே போய் விட்டாள்.

தாயார் வெளியே போனதும் விமலா கதவைத் தாளிட்டு விட்டு சமையலறைக்குச் சென்றாள். அவள் கவனமெல்லாம் எங்கோ இருந்தாலும் யந்திரத்தைப்போல் சமையல் வேலையை ஒரு வழியாக முடித்தாள். பிறகு ஒரு மூலையில் இருந்த அலுமினியத் தட்டை எடுத்துப் வைத்துக் கொண்டாள் செய்த சமையலை வட்டித்துக் கொண்டு சாப்பாட்டையும் முடித்தாள்.

வேலைகள் ஒருவகையாக முடிந்த பிறகு பாய் ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டு படுத்தாள். வேலை செய்த களைப்பு ஒருபுறம், இருந்த போதிலும், கவலையால் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. அவள் மல்லாந்து படுத்த வண்ணம் வீட்டின் கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய எண்ணச் சுழலில் இனி என்ன செய்வது என்ற கேள்வியே இருந்து வந்தது. சினிமாவில் அவள் நடிக்க வந்ததிலிருந்து அன்றுவரை ஏற்பட்ட வெற்றி தோல்விகளைச் சிந்தித்துப் பார்த்தாள். அவளது சிந்தனையில் சினிமாத்தொழிலிருந்து விடுதலை பெறுவதுதான் சிறந்தது என்றே பட்டது. தான் சற்று முன் தாயாரிடம் சொன்னதற்கும் அதற்கும் சரியாக இருக்கவே அவ்வளவு கலக்கமான நிலையிலும் அவள் மனதில் கொஞ்சம் சந்தோஷம் ஏற்பட்டது. அப்படியே கண்ணயர்ந்தாள்.

எவ்வளவு நேரம் தூங்கினாளோ விமலாவுக்கே தெரியாது. மாலை அந்தி மயங்கும் நேரத்திற்கு அவள் தாயார் காமாட்சி அம்மாள் வந்து கதவைத் தட்டிய பொழுதே கண் திறந்தாள்.

கதவைத் திறந்து, தாயார் உள்ளே வந்த பிறகு, "சென்ற காரியம் என்ன" என்று கேட்டாள் விமலா.

சோர்வுற்று வந்த காமாட்சியம்மாள் பரிதாபமான குரலில், "என்னதைச் சொல்வது விமலா? நான் நினைத்தபடி பார்வதி அம்மாள் பணம் கொடுக்க வில்லை. அவர்களுக்கே இப்பொழுது கஷ்டமாம். அவருடைய பிள்ளை ஆபிஸில் ஏதோ தப்புச் செய்து விட்டு கேஸில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாராம். அதற்காகத்தான் அவர்கள் இந்த ஊருக்கு வந்திருக்கிறார்களாம். நம் கஷ்டம் எல்லோரையும் பிடித்துக் கொள்கிறது. என்ன செய்வது?" என்றாள்.

"முடிவுதான் என்ன, அம்மா?"

"முடிவு என்ன? அந்த அம்மாள் இப்பொழுது உபகாரம் செய்யும் நிலையில் இல்லை. பிள்ளை செய்த காரியத்தினால் அவர்கள் சொத்துக்கே ஆபத்து வருமோ என்று பயந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நம் செலவுக்காக பத்து ரூபாய் கொடுத்தார்கள். இன்னும் இரண்டு மூன்று நாள் பொறுத்து வநது பார்க்கச் சொல்லி யிருக்கிறார்கள்."

"சரி, இன்னிக்கி நம் குடித்தனம் சந்தியிலேதான் நிற்கப் போகிறது" என்று வருத்தம் தோய்ந்த தொனியில் கூறினாள் விமலா.

"விவகாரம் தலைக்கு மேல் போய்விட்டது. இனி அதைப் பற்றிக் கவலைப்படுவதில் பிரயோசனமே இல்லை. சரி, போ இருட்டி விட்டது. விளக்கை ஏற்று" என்றாள் காமாட்சி அம்மாள்.

விமலா சுவற்றிலிருந்த விளக்கை ஏற்றுவதற்கும் கனகம்மாள் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

எங்கோ பார்த்துக் கொண்டிருந்த காமாட்சி அம்மாள் அவள் வருவதை கவனிக்கவே யில்லை. பக்கத்தில் வந்து 'காமாட்சி' என்று கூப்பிட்ட பொழுதே அவள் பக்கம் திரும்பினாள். கனகம்மாளைப் பார்த்ததும் அவளுக்கு என்ன செய்வதென்றே தோன்ற வில்லை. நா தழுதழுத்தது. கெஞ்சும் குரலில், "நான் போன இடங்களிலெல்லாம் பணம் கிடைக்கவில்லை. இன்னும் இரண்டு நாள் போனால் கட்டாயம் கொடுக்கிறேன் என்றார்கள். இன்னும் இரண்டு நாள் எனக்காகப் பொறுத்துக் கொள்" என்றாள்.

அதுவரை மிகவும் சாந்தமாக இருந்த கனகம்மாள் இப்பொழுது காளியாகவே மாறிவிட்டாள். "எனக்கு அப்பவே தெரியும், நீங்கள் பணம் கொடுக்க மாட்டீர்கள் என்று. போகட்டும், மாலை வரை பொறுக்கலாம் என்று போனேன். நான் நினைத்தபடியே விவகாரம் முடிந்து விட்டது" என்றாள்.

காமாட்சி அம்மாளால் இந்தச் சொல்லைப் பொறுக்க முடிய வில்லை. காலை முதல் சாப்பாடு கூட இல்லாமல் பணத்திற்காக ஓடி அலைந்து களைத்து வந்திருந்ததால், இச்சொல்லால் ஆத்திரமே ஏற்பட்டது. அவள் பலத்த குரலில்

"என்னது உனக்குத் தெரியும்? எதைக் கண்டு விட்டாய்? போ, பணம் கொடுக்க முடியாது. என்ன செய்கிறாயோ செய்", என்றான்.

"என்ன செய்வதோ அதைச் செய்வதா? இதோ பார், உன் சாமான்களை தூக்கி வாசலில் போடுகிறேன். ஞாயமாக வாடகையைக் கேட்டால் இப்படியா பேசறே?" என்றான் கனகம்மாள்.

மௌனமாக நடந்தவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த விமலா சட்டென்று குறுக்கிட்டு, "வேண்டாம் அம்மா அப்படி ஒன்றும் செய்து விடாதீர்கள். இன்னும் இரண்டு நாள் பொறுத்துக் கொள்ளுங்கள். பணத்தைக் கொடுத்து விடுகிறேன்" என்று கனகம்மாளை கெஞ்சினாள்.

"உன் அம்மா அப்படிப் பேசின பிறகு இனி உங்களுக்கு பச்சாதாபமே பார்க்க மாட்டேன். இப்பொழுதே நாலு ஆளைக் கூப்பிட்டு சாமானைத் தூக்கி வாசலில் போடச் சொல்கிறேன் பார்" என்று கூறி வாசல் பக்கம் போக யத்தனித்தாள்.

அதே சமயம் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இருவர் அவசரமாக இறங்கி வந்து, வெளியே போய்க் கொண்டிருந்த கனகம்மாளிடம் "இது தானே சினிமா நடிகை விமலா வீடு?" என்று கேட்டனர்.

கோபமாகப் போய்க் கொண்டிருந்த கனகம்மாள் இந்த எதிர்பாராத கேள்வியைக் கேட்டு சற்று ஆச்சரியமடைந்தாள். உடனே தன் கோபத்தை அடக்கிக் கொண்டு மிகவும் தாழ்ந்த பாணியில் "ஆமாம்" என்று கூறி, திரும்பவும் அவர்கள் பின்னால் உள்ளே வந்தாள்.

வந்த இருவரும் உள்ளே நுழைந்தனர் விளக்கு வெளிச்சத்தில் விமலாவைக் கண்டு வந்தவர்களில் ஒருவர் மற்றவருக்கு "இவர்தான் நான் சொன்ன விமலா" என்றார்.

விமலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் திக்பிரமை கொண்டவள்போல் சிறிது நேரம் நின்றிருந்தாள். பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு, "நீங்கள் யார?" என்று கேட்டாள்.

"நான்தான் டைரெக்டர் ராஜ். இவர் கமலா பிக்சர்ஸின் சொந்தக்காரர் கமலநாதன்" என்றார் வந்தவர்களில் ஒருவர்.

காமாட்சி அம்மாள் மூலையில் 'உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன்' என்றிருந்த இரண்டு நாற்காலிகளை எடுத்து வந்து போட்டு அவர்களை உட்காரச் சொன்னாள். அவர்கள் இருவரும் அதில் உட்கார்ந்த பிறகு, "என்ன விஷயம்?" என்று கேட்டாள் விமலா.

"விஷயத்தைச் சொல்கிறேன். இவர் யார், உங்கள் தாயாரா?" என்று காமாட்சி அம்மாளைச் சுட்டிக் காட்டிக் கேட்டார் டைரெக்டர் ராஜ்.

"ஆமாம்."

"நமஸ்காரம். சந்தோஷ சமாசாரத்துடன் வந்திருக்கிறோம். எங்கள் படத்தில் கதாநாயகியாக உங்கள் பெண்ணை நடிக்க ஒப்பந்தம் செய்ய நினைக்கிறோம்" என்றார் ராஜ்.

காமாட்சி அம்மாள் பதில் சொல்வதற்குள் விமலா, "என்னையா உங்கள் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப் போகிறீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்

"ஆமாம். அக்ரிமென்ட் பாரம், அட்வான்ஸ் எல்லாம் கையோடேயே கொண்டு வந்திருக்கிறோம்" என்றார் கமலநாதன்.

காமாட்சி அம்மாளுக்கும், ஒரு ஓரத்தில் திரும்பவும் வந்து நின்றிருந்த கனகம்மாளுக்கும் இந்த வார்த்தைகள் ஆச்சரியத்தை உண்டாக்கியது. இருவரும் பிரமித்து அப்படியே நின்றுகொண்டிருந்தனர்.

விமலா அன்று காலை செய்த முடிவை மனதில் கொண்டு "கதாநாயகியாகவா நடிக்க வைக்கப் போகிறீர்கள்?" என்று வேண்டுமென்றே கேட்டாள்.

"ஆமாம்!"

விமலா சிரித்தாள். பிறகு, "எனக்கு என்ன முகவெட்டு இருக்கிறது என்று அப்படிச் செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். மிஸ் விமலா, எனக்குத் தெரியும் உங்கள் முகவெட்டு."

"சரி, அது போகட்டும். கதாநாயகியானால் பாட வேண்டும் அல்லவா?"

"ஆமாம். இரண்டு பாட்டுக்களாவது இருக்கும்."

"எனக்குப் பாட வராதே"

டைரக்டர் ராஜிற்குச் சந்தேகம் வந்துவிட்டது. ஆனாலும் அவர் மனம் தளரவில்லை. "பாடத்தானே தெரியாது என்கிறீர்கள். பயப்பட வேண்டாம் எங்களிடத்தில் ஒரு பெண் இருக்கிறாள். அவளைப் பாடச் சொல்லி விடுகிறேன்."

"ஏன் பேச்சுக்கூட சரியாக இருக்காது. நான் நடித்த ஒரு படத்தில் இரண்டு வார்த்தைகள்தான் பேசியிருக்கிறேன். அதுகூடச் 'சரியில்லை' என்று எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள்."

டைரெக்டர் ராஜிற்கு விமலா பேசும் தோரணையிலிருந்து சந்தேகம் பலத்தது. தாம் நினைத்து வந்த விமலாவா, அல்லது வேறு யாராவதா என்ற சந்தேகம் கூடச் சிறிது ஏற்பட்டது. விமலா பேசிய பாணியிலிருந்தும், அவள் இதழ்

க்கடையிலேயே மறைந்து வெளிவந்து கொண்டிருந்த புன்சிரிப்பின் சாயலிலிருந்தும் அவள் ஏதோ வீம்புக்குப் பிடிவாதமாக அப்படிப் பேசுகிறாள் என்பதை அவர் அறிந்துகொண்டார். அதனால், "நீங்கள் பேசக்கூட வேண்டாம். அதையும் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

"உங்கள் இஷ்டம். என்னை ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகு வீணாகக் கஷ்டப்படப் போகிறீர்கள் என்று தான் எல்லாவற்றையும் முன்பே சொல்கிறேன்" என்றாள் விமலா.

"மிஸ் விமலா. உங்களை எனக்கு ராமகிருஷ்ணா பிலிம்ஸிலிருந்து தெரியும். நான் நீங்கள் நடித்த அந்தப் படத்தின் உதவி டைரெக்டர். உங்கள முகவெட்டு, பேச்சுவன்மை, குரல் எல்லாவற்றையும் பார்த்ததிலிருந்து எப்படியும் உங்களை ஒரு படத்தில் கதா நாயகியாக நடிக்கச் செய்ய வேண்டும் என்று அப்பொழுதே தீர்மானித்தேன். அதற்கு இப்பொழுது தான் சரியான சந்தர்ப்பம் கிடைத்தது."

"உங்கள் அபிமானத்திற்கு வந்தனம்; ஆனால் நான் இப்பொழுது நடிப்பதையே விட்டு விட்டேனே."

டைரெக்டர் ராஜ் லேசாகச் சிரித்தார். பிறகு, "இப்படியே வீண் பேச்சுப் பேசுவதென்றால் காலம் தான் விரயமாகும்... அம்மா! நீங்கள் தான் சொல்ல வேண்டும்" என்று காமாட்சி அம்மாள் பக்கம் திரும்பிச் சொன்னார்.

காமாட்சி அம்மாளுக்கு ஒருபுறம் சந்தோஷம். மறுபுறம வேண்டாம் என்று தீர்மானித்த தொழிலுக்கே திரும்பவும் போவதா என்ற கேள்வி. போகக் கூடாது என்றால் விடு தேடி வந்த 'சான்ஸ்' போய் விடுமே என்ற கவலை வேறு புறம். இப்படியாக அவள கலங்கியிருந்தாள். அதனால் டைரெக்டர் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று யோசித்தாள். அவள் மனதுக்கு, தேடி வந்த 'சான்ஸை' விடக் கூடாது என்றே தோன்றியது. ஆகவே விமலாவின் பக்கம் பார்த்து, "ஒப்புக் கொள், விமலா" என்றாள்.

அவள் சொல்லால் டைரெக்டர் ராஜ் சந்தோஷமடைந்தார். விமலாவைப் பார்த்து "உங்கள் அம்மா கூட அனுமதி கொடுத்து விட்டார்கள். வாருங்கள், அக்ரிமெண்டில் கையெழுத்துப் போடுங்கள்" என்றார்.

விமலாவின் நிலை தர்மசங்கடமாகியது. அவள் எப்படியும் வந்தவர்களைத் தட்டிக் கழித்து அனுப்பி விடவே அது வரை அப்படிப் பேசி வந்தாள். இப்பொழுதோ அவள் தாயாரே நடிக்கும்படி கூறிய பிறகு அவளால் சட்டென்று எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. வெகு நேரம் வரை சிந்தித்தாள். தங்களது தற்கால நிலை, வாடகைக்காக வந்து நிற்கும் கனகம்மாள், மற்றும் எல்லாவற்றையும் மனதில் கொண்டு முந்திய முடிவை மாற்றுவது என்று தீர்மானித்தாள். உடனே "சரி, எல்லோரும் அப்படிச் சொன்னால் நான் என்ன செய்வது?" என்றாள்.

டைரெக்டர் ராஜிற்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. தான் டைரெக்டரானால் விமலாவைக் கதாநாயகியாக நடிக்கச் செய்ய வேண்டும் என்ற அவருடைய வெகு நாளைய கனவு நிறைவேறிவிட்டதைக் கண்டு உள்ளம் பூரித்தார். உடனே அக்ரிமெண்ட் பாரத்தை எடுத்து அதில் விமலாவை கையெழுத்துப் போடச் சொன்னார். பிறகு ரொக்கமாக இரண்டாயிரம் ரூபாயைக் கொடுத்து, பத்தாயிரம் ரூபாய் 'செக்' ஒன்றையும் விமலாவின் கையில் கொடுத்தார்.

பணத்தையும் 'செக்'கையும் கண்ட விமலாவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. நன்றிகெட்டதாகக் கருதிய சினிமா உலகத்தை விமலா இப்பொழுது என்ன பெயரிட்டு அழைப்பது என்றே தோன்றவில்லை. அவள் திக்பிரமையுடன் பணத்தையும் 'செக்'கையும் கையெழுத்துப் போட்டுப் பெற்றாள்.

காரியம் முடிந்ததும் டைரெக்டர் ராஜ், கமலநாதன் இருவரும் நாற்காலியை விட்டு எழுந்து, "நாங்கள் போகிறோம். நாளை மறு நாளிலிருந்து ஒத்திகைக்கு வந்துவிடுங்கள்" என்றனர் இருவருமாக.

"கொஞ்சம் இருங்கள். ஏதாவது தாகத்திற்குச் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்றாள் காமாட்சி அம்மாள்.

"இருக்கட்டும். எங்களுக்கு இன்று அதிக வேலை இருக்கிறது. இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறி விட்டு ராஜ் கமலநாதனை அழைத்துக் கொண்டு போய்விட்டார்.

அவர்கள் போன பின்பு விமலா கர்வம் நிறைந்த பாணியில் "அம்மா, விட்டுக்கார அம்மாளுக்கு முதலில் பணத்தைக் கொடு." என்று கையிலிருந்த நூறு ரூபாய் நோட்டுகளை காமாட்சி அம்மாவிடம் நீட்டினாள்.

அது வரை பணம் பணம் என்று வாதாடிய கனகம்மாள், முகத்தில் அசடு வழிய காமாட்சியம்மாள கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டே, "பணம் என்ன பிரமாதம்! அது இன்று வரும் நாளை போகும். உங்களைப் போல் நல்ல மனிதர்கள் கிடைப்பது மாத்திரம் கஷ்டம்" என்றாள்.

அவள் சொல்லைக் கேட்டு காமாட்சியம்மாளும் விமலாவும் திகைத்து நின்றனர்.

பிரம்மலோகம்

கன்னியின் காதலி

ஜுபிடரின் ராம்னுத்-சேகர் தயாரிப்பான 'கன்னியின் காதலி' ஆகஸ்ட் மாதம் 2-வது வாரத்தில் திரையிடப் படுமெனத் தெரிகிறது.

வாழ்க்கை

ஏ. வி. எம். ஸ்டுடியோவில் அவர்களது 'வாழ்க்கை' படப் பிடிப்பு வெகு துரிதமாக நடைபெற்று வருகிறது. சகஸ்ரநாமம், திரௌபதி, டி. வி. சேதுராமன் தோன்றும் வெளிப்புறக் காட்சி ஒன்று சமீபத்தில் படமாக்கப் பட்டது.

மருதநாட்டு இளவரசி

கோவிந்தன் அண்டு கம்பெனியாரின் 'மருதநாட்டு இளவரசி' சீக்கிரமே திரைக்குத் தயாராகி விடுமென்று தெரிகிறது. எம். ஜி. ராமச்சந்திரன், வி. என். ஜானகி, புளிமூட்டை ராமசாமி பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை காசிலிங்கம் டைரெக்ட்செய்து வருகிறார்.

ரத்னகுமார்

'ரத்ன குமார்' படம் முடிவடைவதற்கு இன்னும் சில காட்சிகளே பாக்கி. அவைகளும் ஒரு மாதத்திற்குள் முடிவடைந்து விடுமாம்,

சுதர்சன்

கோவையில் ராயல் டாக்கீஸாரின் 'சுதர்சனி'ன் ஷூட்டிங்கும் பரபரப்பாக நடந்து வருகிறது. சமீபத்தில் கண்ணாம்பா சம்பந்தப்பட்ட காட்சிகள் தயாராயின. இப்படம் ஆகஸ்ட் மாதத்தில் முடிவடைந்து விடும் என்று தெரிகிறது.

சுவர்ணமாலா

சுவர்ணம் பிகையின் 'சுவர்ணமாலா'வுக்கான சுசீலாவின் நடனக்காட்சி ஒன்று சமீபத்தில் படமாக்கப்பட்டது. இப்படத்தில் வி. என். ஜானகி, எம். ஜி. ராமச்சந்திரன், பாலய்யா பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

ஔவையார்

சங்கப் புலவர்கள் சென்று கூடும் ஒரு காட்சி சமீபத்தில் கொத்தமங்கலம் சுப்புவின் டைரெக்ஷனில் படமாக்கப்பட்டது. இக்காட்சியில் கே. பி. சுந்தராம்பாள், கே. பி. கேசவன் மற்றும் பலர் நடித்திருக்கின்றனர்.

நிஷான், காந்திமதி

கார்ஸிகன் பிரதர்ஸ் கதையைத் தழுவிய ஜெமினி 'நிஷான்' (ஹிந்தி), 'காந்திமதி' (தமிழ்) படங்களின் படப்பிடிப்பு ஜரூராக நடைபெற்று வருகிறது. சமீபத்தில் இப்படத்திற்காக டாக்டர் வீட்டில் நடைபெறும் காட்சிகள் படமாக்கப்பட்டன. ஹிந்திப் படத்தில் ரஞ்சனும், தமிழ்ப் படத்தில் ராதாவும் கதாநாயகர்களாக நடிக்கின்றனர். இரண்டு படங்களிலும் பானுமதிதான் கதாநாயகியாக நடிக்கிறார். தமிழ்ப் படத்தை ஆச்சாரியாவும். ஹிந்திப் படத்தை ஸ்ரீ. எஸ். எஸ். வாஸனும் டைரெக்ட் செய்கின்றனர்.

நாட்டிய ராணி

பாஸ்கர் பிக்சர்ஸாரது 'நாட்டி ராணி' ஒரே மாதத்திற்குள் திரையிடத் தயாராகி விடுமாம். பி. என். ராவ் டைரெக்ஷனில் இப்பொழுது பி. எஸ். சரோஜா தோன்றும் காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன.

தாயார்

நாகேந்திர ராவின் மேற்பார்வையில் 'தாயார்' கன்னட தமிழ்ப் படங்களுக்கான பூர்வாங்கவேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதய கீதம்

டி. ஆர். மஹாலிங்கம், டி. ஆர். ராஜகுமாரி பிரதம பாகங்களில் நடிக்கும் இந்தப் படத்திற்காக பிரமாதமான காட்சி ஒன்று சமீபத்தில் படமாக்கப்பட்டது. ஜோஸப் தளியத் இப்படத்தை டைரெக்ட் செய்கிறார்.

லைலா மஜ்னு

நாகூரின் டைரெக்ஷனில் பாலாஜியின் 'லைலா மஜ்னு' படப் பிடிப்பு முன்னேறி வருகிறது. டி. ஆர். மஹாலிங்கம் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாகி வருகின்றன. மற்றும் இப்படத்தில், எம். வி. ராஜம்மா, ஸஹஸ்ரநாமம், பஷீர், கிருஷ்ணன், மதுரம் முதலியவர்கள் நடிக்கின்றனர்.

மங்கையர்க்கரசி

இன்னும் இரண்டொரு காக்ஷிகள் முடிவடைந்தால் 'மங்கையர்க்கரசி' திரையிடத் தயாராகிவிடுமாம். ஜித்தன் பானர்ஜி

டைரி

ஜூ[illegible], 1949

தேதி

4. காஸினோ தியேட்டரின் முதலாளி ஸ்ரீ. ஜே. எச். இரானி காலமானார்.
5. ஸ்ரீ. ஜே. எச். இரானி காலமானதை முன்னிட்டு, ஸ்டார், காஸினோ தியேட்டர்களும் மூடப்பட்டன.
7. சன் தியேட்டர் முதலாளி ஸ்ரீ. டி. சுந்தர்ராவ் நாயுடு காலமானார்.
8. என். எஸ். கிருஷ்ணன் 'என் கடன் களிப்பூட்டல்' என்பது பற்றி சென்னை ரேடியோவில் பேசினார்.
   ஸ்ரீ. சுந்தர் ராவ் நாயுடுவின் மரணத்திற்காக முன்னிட்டு சன் தியேட்டர் மூடப்பட்டது.
9. ஸ்ரீ. சுந்தர் ராவ் நாயுடுவின் மரணத்திற்காக தென்னிந்திய பிலிம் சேம்பர் மூடப்பட்டது.
12. "மச்சரேகை"யின் ஆரம்ப விழா நியூடோனில் நடைபெற்றது.
   என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் நடிகர் சங்கம் ஆரம்பமாயிற்று.
   சேலத்துக்கு அருகில் ஏற்பட்ட கோர விபத்தில் போலோநாத் மரணம் அடைந்தார். பி. எஸ். சரோஜாவுக்குக் காயம் ஏற்பட்டது.
13. தியேட்டர்களில் புகை பிடிப்பதைத் தடை செய்யும் சட்டம் கொண்டு வரப்பட்டது.
14. "பிழைக்கும் வழி" சென்னையில் சன், பிராட்வே ஆகிய இரு தியேட்டர்களிலும் திரையிடப்பட்டன.
   நடிகர் சங்கத்தின் முதல் கூட்டம் நியூடோன் ஸ்டுடியோவில் நடைபெற்றது.
   தியாகராஜ பாகவதரை கௌரவிக்க, சென்னபுரி விஸ்வ பிராமண மஹா சபையின் கூட்டம் நடைபெற்றது.
   கே. பி. சுந்தராம்பாளுக்கு தருமபுர ஆதீன மடாதிபதி 'ஏழிசை வல்லபி' என்ற பட்டத்தை அளித்தார்.
16. எம். கே. தியாகராஜ பாகவதருக்கு 'ஏழிசை மன்னன்' என்ற பட்டத்தை தருமபுர ஆதீன மடாதிபதி அளித்தார்.
20. சென்னை காஸினோவில் இந்தியச் செய்திப்பட இலாகாவினால் தயாரிக்கப்பட்ட முதல் செய்திப்படம் திரையிடப்பட்டது.
21. இந்திய சர்க்கார், 'பிலிம் ஆலோசனை போர்டை' நியமித்தது.
24. தியேட்டர்களைத் திறந்து வைக்கும் நேரம் பற்றி சென்னை சர்க்கார் ஒரு அறிக்கை விடடனர்.
26. 'நன் நாட்டை அவன் பாதுகாக்கிறான்' என்ற ரஷ்யப் படத்திற்கு சென்னை சர்க்கார் தடை விதித்தது.
28. "நவஜீவனம்" வெளியூர்களில் திரையிடப்பட்டது.
   'பிலிம் ஆலோசனை போர்டி'ன் முதல் கூட்டம் நடைபெற்றது.
29. தஞ்சையில், பட்டுக்கோட்டை அழகிரிசாமி நிதிக்காக, ஸி. என். அண்ணாதுரையின் தலைமையில், என். எஸ். கிருஷ்ணனின் 'கிந்தனா'ரும், காந்தி மஹான் கதையும் நடைபெற்றது.

வின் டைரெக்ஷனில் தயாராகும் இப்படத்தில் சின்னப்பா, கண்ணம்பா, அஞ்சலி தேவி பிரதம பாகங்களில் நடிக்கின்றனர். லலிதா-பத்மினி நாட்டியமும், கிருஷ்ணன் மதுரம் ஹாஸ்யமும் இப்படத்தை மேலும் சிறப்பிக்கும் என்று தெரிகிறது.

மாயாவதி

மாடர்ன் தியேட்டர்ஸ் 'மாயாவதி' ஒரே மாதத்திற்குள் காட்சிக்குத் தயாராகி விடுமாம். சமீபத்தில் மஹாலிங்கம் தோன்றும் வெளிப்புறக் காட்சி ஒன்றும், லலிதா-பத்மினி நாட்டியமும் இந்தப் படத்திற்காகத் தயாராயின.

இன்பவல்லி

ஜூபர் பிக்சர்ஸ் வெளியீடான, சியாமளாவின் 'இன்பவல்லி' சேலம் ரத்னாவில் முன்னேறி வருகிறது. பி. எஸ். சரோஜா தோன்றும் இரண்டொரு காக்ஷிகள் முடிவடைந்தால் படம் திரையிடத் தயாராகி விடுமாம். சீக்கிரமே திரையிடப் பெற இருக்கும் படங்களில் இதுவும் ஒன்று.

பொன்முடி

எல்லிஸ். ஆர். டங்கனின் டைரெக்ஷனில் நரசிம்மபாரதியையும்-மாதுரி தேவியையும் பிரதம பாகத்தில் கொண்டு படப்பிடிப்பு ஜரூராக நடைபெற்று வருகிறது.

ஏழுமுடி மன்னன்

டி. எஸ். துரைராஜின் 'ஏழு முடி மன்னன்' படமும் இங்குதான் தயாராகி வருகிறது. துரைராஜ், டி. ஏ. ஜெயலக்ஷ்மி, பி. சுந்தர் ராவ் முதலியவர்கள் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

அம்பிகா தேவி

சந்திரலேகா பிலிம்ஸின் 'அம்பிகா தேவி' படப் பிடிப்பு நியூடோனில் டி. ஆர். கோபு டைரெக்ஷனில் நடைபெற்று வருகிறது. இப்படத்தில் சேர்ப்பதற்காக ஒரு கோஷ்டி நடனம் தயாராகி வருகிறது.

மச்சரேகா

சுகுமார் ப்ரொடக்ஷன்ஸ் 'மச்சரேகா'விற்காக டி. ஆர். மஹாலிங்கம், சாந்தகுமாரி இவர்களின் சில பாட்டுகள் சங்கீத டைரெக்டர் சுப்பராமனின் மேற்பார்வையில் பதிவாகி விட்டன. சீக்கிரமே நியூடோனில் படப் பிடிப்பு ஆரம்பமாகுமாம்.

தேவமனோஹரி

ஆர்கேயெஸ் பிக்சர்ஸ் 'தேவ மனோஹரி' படப் பிடிப்பு ஜூலை மாத மத்தியில் முடிவடைந்து விடுமென்று தெரிகிறது. சமீபத்தில் பிரகதியில் தேவமனோஹரி, வல்லபன் காதல் காட்சிகள் படமாயின. தேவமனோஹரியாக பானுமதியும், வல்லபனாக ஹொன்னப்ப பாகவதரும் நடிக்கின்றனர்.

பாகவதரின் புதுப் படம்

தியாகராஜ பாகவதர் ஜெமினி ஸ்டியோவில் தம் படம் ஒன்றைத் தயாரிக்கப் போகிறாராம். கதை அநேகமாக வித்தியாசாகரராக இருக்குமென்றும், டி. ஆர். ராஜகுமாரி அவருடன் நடிக்கக்கூடுமென்றும் தெரிகிறது.

வாழ்த்துகிறோம்

பிரபல ஹாஸ்ய நடிகை ஸி. டி. ராஜகாந்தம் இம்மாதம் முதல் தேதி மாமியாரானார். அவரது புத்திரி சௌ. ஸி. ஏ. ராஜலக்ஷ்மியை, திருச்சி எம். எம். மாரியப்பாவின் சகோதரர் சிரஞ்சீவி திருச்சி லோகநாதன் தம் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார். சேலம் டவுனில் வெகு சிறப்பாக நடந்தது இத் திருமணம்.

"கல்கி" பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஸ்ரீ. ஆர். வீழிநாதன் அவர்களின் புத்திரி சௌ. மோஹனாம்பாளை, சிரஞ்சீவி. எஸ். சுப்ரமணியம், இம்மாதம் 8ம் தேதி விஷ்ணுபுரத்தில் மணந்து கொண்டார்.

'சினிமா' பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ. கெ. பார்த்தசாரதி, சௌ. சீதாலக்ஷ்மியை, துவரிமான் என்ற ஊரில் இம்மாதம் 20ம் தேதி மணந்து கொண்டார்.

[illegible]
பார்த்தசாரதி இம்மாதம் 8ம் தேதி, நாகப்பட்டணத்தில் மணந்து கொண்டார்.

'பாரிஜாதம்' பத்திரிகையின் சர்குலேஷன் மானேஜர் ஸ்ரீ. எஸ். சர்மா, இம்மாதம் 19ம் தேதி, கும்பகோணத்தில், சௌ. சரஸ்வதியை பாணிக்கிரஹணம் செய்து கொண்டார்.

தம்பதிகளுக்கு நம் ஆசிகள்.

வாடா மலர்க் கொத்து

1. **வத்ஸலையின் வாழ்க்கை**
   "சாவி" — 1 0 0

2. **தெய்வச் சிலம்பு**
   எம். சரோஜினி — 1 0 0

3. **வன ராணி**
   (சிறுவர் கதை) — 0 4 0

4. **ஜிம்மியுப் சீனுவும்**
   (சிறுவர் கதை) — 0 4 0

5. **முயல் வேட்டை**
   (சிறுவர் கதை) — 0 4 0

ஏஜெண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு.

தனிப் புத்தகம் வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். தபால் செலவு வேறு.

வாடாமலர் பதிப்பகம்

மாம்பலம் :: சென்னை-17.

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 25 Godown Street, Madras-1. Telephone 4316.

முயற்சி வீணாவதை தடுக்கலாம்

உங்களுக்கு தேவையான அச்சு வேலைகளை தீர ஆலோசித்துத் திட்டத்துடன் செய்தீர்களானால், குறைந்த செலவில் நிறைந்த பலனை அடையலாம்.

அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நீண்ட நாள் அனுபவமும், பழக்கமும் அவசியம். பல வருஷங்களாக நாங்கள் நானாவித அச்சு வேலைகளைச் செய்து நல்ல அநுபவம் பெற்றுள்ளோம். நீங்கள் கண்டபடி முயற்சி செய்து நஷ்டம் அடைவதற்குப் பதில், எங்கள் அநுபவத்தைக் குறைந்த செலவில் உபயோகித்துக் கொண்டு மிகுந்த பயனடையலாம்.

போன்: 4037

தந்தி: "PRINTHOUSE"

கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்

45/46, அரண்மனைக்காரத் தெரு :: சென்னை-1.